Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

**AXSHAYA CONSTRUCTION JAFFNA**

கட்டடங்கள் கட்டுதல்,வீடு கட்டுதல், பழைய வீடு களைத் திருத்துதல்,குளியலறை கட்டுதல்

Plumbing, Electrical, Painting

அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.



தொடர்புக்கு: 0776679564

(C/3690)

முரசு – 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 23 வெள்ளிக்கிழமை (06.06.2014) | பக்கங்கள் 20 | ஓசை – 248

## படையில் இணைந்தவர்களுக்கு நேற்று நியமனக்கடிதங்கள்



(யாழ்ப்பாணம்)

சிவில் பாதுகாப்புப் படையில் இணைந்து கொண்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று பலாலி படைத்தலை மையகத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைப்போல் யாழ்ப்பாணத்திலும் சிவில் பாதுகாப்புப் படையின் செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் சிவில் பாதுகாப்புத்திணைக களத்தினால் யாழில் நடாத தப்பட்ட நேர்முகத்தேர்வில் 66 பேர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான நியமனம் வழங்கப் பட்டது. இதில் 18 பெண்களும், 48 ஆண்களும் அடங்குகின்றனர். அடிப்படை சம்பளமாக ஆரம்பத்தில் 18 ஆயிரம் ரூபா வழங்கப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## படையில் இணைந்த இளைஞர் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

இராணுவ சேவையில் இணைந்து பணியாற்றும் சங்கானைப்பகுதி இளைஞர் ஒருவரை இனந்தெரியாதோர் வாளால் வெட்டியுள்ளனர்.

சங்கானை ஆலய வீதியில் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் இவ்வாள் வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாள்வெட்டு சம்பவத்தில், அதே இடத்தினைச் சேர்ந்த செல்வரட்ணம் சதீஸ்வரன் (வயது-26)என்ற இளைஞரே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, குறித்த இளைஞருக்கு 10 இலட்சத்திற்கு அதிகமாக கடன் இருந்துள்ளது. இந்நிலையில், கடந்த ஓரிரு மாதங்களிற்கு முன்பாக இலங்கை இராணுவத்தில் இணைந்து கடமையாற்றி வந்துள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில் ஒன்பது பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் பிரிவில் சந்தேகத்திற்கிடமாக நடந்து கொண்டார்கள் என்ற அடிப்படையில் நேற்று மட்டும் ஒன்பது இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்கள் மீதான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட விருப்பதாகவும் பொலிஸ் தரப்பில் நேற்று தெரிவிக்கப்பட்டது. (25)

# மீள் குடியமர்வுக்கு உதவ அமெரிக்கா ஆர்வம்

(யாழ்ப்பாணம்)

**யுத்த காலத்தில் இடம்பெயர்ந்து இன்னமும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படாமல் உள்ள மக்களின் நலன்புரித்திட்டங்களுக்கு உதவுவதற்கும் அவர்களின் மீள்குடியமர்வுக்கு உதவுவதற்கும் அமெரிக்க அரசு தயாராக இருப்பதாக இலங்கைக்கான அமெரிக்க தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். யாழ். அரச அதிபருடன் நேற்று இவ்விடயம் தொடர்பாக இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.**

(19) ஆம் பக்கம் பார்க்க



## சிவநகரில் பௌத்த விகாரை தடயங்கள் மீட்பு

கிளிநொச்சியில் பௌத்த விகாரை ஒன்றும் பௌத்த தொல்பொருட்களும் இருந்தமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

உருத்திரபுரம், சிவநகர் பகுதியில் பொலநறுவை ஆட்சிக்காலத்தில் அங்கிருந்த பௌத்த விகாரையை ஒத்த ஆதாரங்களே கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஆரம்ப மருத்துவ நிலையம் தொல்புரத்தில் நேற்று திறப்பு



(யாழ்ப்பாணம்)

சங்கானை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தொல்புரம் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலைய கட்டடத் திறப்பு நிகழ்வு நேற்று தொலபுரம் ஆரம்ப மருத்துவ பிரிவில் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு. தொல்புரம் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு

(19) ஆம் பக்கம் பார்க்க

## முல்லையில் நேற்று ஆர்ப்பாட்டம் எதிரும்புதிருமான கோஷங்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரில் நேற்று ஏட்டிக்குப்போட்டியான இரு ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. இதனால் முல்லைத்தீவு நகர பஸ்நிலையப்பகுதி நேற்று பரபரப்பு நிறைந்த நிலையில் காணப்பட்டது.

பொது மன்னிப்பும் பாதுகாப்பும் வழங்கப்படும் என்ற அரசாங்கத்தின் உத்தரவாதத்தையடுத்து, இராணுவத்தினரிடம் சரணடைந்து பின்னர் காணாமல் போயுள்ளவர்களைக் கண்டு பிடித்துத் தருமாறு கோரியும், இவ்வாறு காணாமல் போயுள்ளவர்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுக்கள் மீதான நீதிமன்ற விசாரணையைத் துரிதப்படுத்தக் கோரியும் முல்லைத்தீவு பேருந்து நிலையத்தருகில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர்களான ரவிகரன், அன்ரனி ஜெகநாதன், சிவாஜிலிங்கம் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், பிரதேச சபை உறுப்பினர் சஜீவன் மற்றும் காணாமல் போயுள்ளவர்களின் உறவினர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பொது மக்கள் கலந்து கொள்வதைத்

(19) ஆம் பக்கம் பார்க்க

# வடக்கின் கடல்வளத்தை அழிக்க இடமளிக்க முடியாது

## நாடாளுமன்றில் சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கின் கடல்வளத்தை யாரும ஆக்கிரமிக்கவும் அதனை சூறையாடவும் அனுமதிக்க முடியாது என்றும்,

வடக்கின் எல்லாப் பகுதிகளிலும் அட்டை மற்றும் சங்கு குளித்தலில் ஈடுபடும் தொழிலாளர்களைத் தடை செய்யவேண்டும். ஏனென்றால், இவர்களது செயற்பாடு உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கின்றது. சங்கு குளித்தலென்ற போர்வையில் அவர்கள் சட்டவிரோத தங்கூசி வலைகளையும் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகின்றார்கள்.

அத்தோடு முல்லைத்தீவு தொடக்கம் மன்னார் வரையுள்ள கடற்பிரதேசங்களில் சிலிண்டர்களைப் பயன்படுத்தி அட்டை, இறால் பிடித்தலிலும் மற்றும் சங்கு குளித்தலிலும் ஈடுபடுவோரினது ஆக்கிரமிப்பானது அங்குள்ள உள்ளூர் கடற்றொழிலாளர்களுக்கு மிகவும் அசௌகரியங்களையும் அவர்

(19) ஆம் பக்கம் பார்க்க



## சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு விரைவில் நட்டஈடு

## இராணுவப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

வடக்கில் இராணுவத்தேவைகளுக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு நட்டஈடு வழங்கப்படவிருப்பதாக இராணுவப்பேச்சாளர் தெரிவித்தார்.

புலிகளின் அமைப்பு மீண்டும் உயிர் பெறுவதை தடுக்கும் நடவடிக்கைகளுக்கு அச்சுவேலி இராணுவ முகாம் மிகவும் முக்கியமென கருதப்படுவதனால் எக்காரணம் கொண்டும் அந்த முகாம் அகற்றப்பட மாட்டாதென இராணுவ

(19) ஆம் பக்கம் பார்க்க

உள்ளே

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்



குருபெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

மெய்ப்பொருள் சமத்துவம் சகோதரத்துவம்

# சாவகச்சேரியில் இன்று விழிப்புணர்வு ஊர்வலம்

(தென்மராட்சி)
தென்மராட்சி வாழ்வெழுச்சி சமுர்த்தித் திணைக்களமும், தென்மராட்சி கல்வி வலயமும், தென்மராட்சி மதுவரித் திணைக்களம் இணைந்து நடத்தும் புகைத்தல் ஒழிப்புதின விழிப்புணர்வு ஊர்வலம் இன்று காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலிருந்து ஆரம்பமாகி சாவகச்சேரி நகரில் வலம் வரவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க் உயர்தரக் கல்வி மாணவர்கள், சமுர்த்திப் பயனாளிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (11)


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)

□ □ □ □ □

### வேலைவாய்ப்பு

விமான நிலையத்தில் (தனியார்) நிரந்தரமான வேலைவாய்ப்பு 6ஆம் தரம் O/L, A/L படித்த 18-50 வயதான ஆண், பெண் அனைவருக்கும் சாப்பாடு, பொருட்கள் பெக்கிங், சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர் ஆகிய பகுதிக்கு உடனடியாக ஊழியர்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி பயிற்சியுடன் வழங்கப்படும். சம்பளம் 18,000/- - 35,000/-

□ □ □ □ □

நம்பிக்கை எங்களுடைய சான்றிதழ் நிரந்தரமான தொழில் ஐஸ்கிறீம், கொக்லேட், டொபி, கிளவுஸ் ஆகிய நூர் உற்பத்திக்கு பெக்கிங், ஸ்டோர்ஸ், செக்கிங் ஆகிய பிரிவுக்கு 18 - 55 வயதான ஆண், பெண் தேவை. வருகின்ற தினம் சாப்பாடு இலவசமாக வழங்கப்படும். சம்பளம் 25,000/- 35,000/- வரை நண்பர்கள், தம்பதிகள் குழுக்களாக இணைந்து கொள்ளலாம். தொடர்புக்கு: 0710854068


## பொதுக் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தை கூட்டுறவுத் திணைக்களத்தில் புதிதாகப் பதிவு செய்வதற்கான விசேட பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நெல்லியடி பழைய சந்தை மேல்மாடிக் கட்டடத்தில் அமைந்துள்ள சங்கக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி சங்கத்தின் தலைவர் சி.சுகிர்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமராட்சி கூட்டுறவு உத்தியோகத்தர் வ.விபுலனும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட ஒன்றியத் தலைவர் கே.ரத்தினராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (116)

□ □ □ □ □

(வேலணை)

யாழ்.மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத்தில் 5 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டமானது நாளை காலை நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத்தின் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவிருக்கின்ற இந்தக் கூட்டத்தில் கொழும்பில் அமைந்துள்ள தாய்ச்சங்கத்தின் தலைவர் ஆர்.எம். வி.ஜே.ரணதுங்கா கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார். இதனையடுத்த புதிய ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு இடம்பெறவுள்ளன. (05)

□ □ □ □ □

இலங்கை ஆசிரியர் சங்க கிளிநொச்சி மாவட்ட பொதுக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்லூரி நிறுவகத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 12.30 மணிக்கு இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் மாவட்டக் கிளை நிர்வாகக் குழுத் தெரிவு, ஆசிரியர், அதிபர், மாணவர் தொடர்பாக மாவட்ட மட்ட பிரச்சினைகளைக் கலந்துரையாடி தீர்மானம் எடுத்தல் உட்பட பல்வேறு பிரச்சினைகள் ஆராயப்படும்.

## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



1 ஆவது அகவையில்

HAPPY BIRTHDAY

பெயர் : பிரதீபன் லதுமிதா
முகவரி : நாகபூசணி அம்மன் வீதி
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

HAPPY BIRTHDAY

HAPPY BIRTHDAY


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2534 திகதி 04-06-2014

ஆங்கில எழுத்து: Z

வெற்றி எண்கள்: 28 34 44 50

போனஸ் இல: 40

ஜக்பொட் பரிசு ரூ.**10,000,000/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 192728 | 20/- | 3,854,560/- |
| 2 இல | 13710 | 100/- | 1,371,000/- |
| 3 இல | 287 | 1,000/- | 287,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7664 | 40/- | 306,560/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 548 | 1,000/- | 548,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 14 | 10,000/- | 140,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,000,000/- | - |
| 1 இல + போனஸ் இல | 9154 | 100/- | 915,400/- |
| 2 இல + பேரனஸ் இல | 421 | 500/- | 210,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 391 | 200/- | 78,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 14 | 1,500/- | 21,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 224937 | | 9,282,220/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.06.07 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 10,525,000/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333540

(C/3700)


# மாவட்டச் செயலகம்

# கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலரால் யாழ்.மாவட்டச் செயலக நான்கு மாடிக் கட்டட நிர்மாணம் பகுதி - V, சங்கானைப் பிரதேச மேலதிக நிர்வாகக் கட்டட நிர்மாணம் பகுதி - I வேலைக்காக தகமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக் கேள்வியானது தேசியப் போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுடைய தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 09.06.2014 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் உதவி மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (தொலைபேசி இல. 0212222771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து 09.06.2014 முதல் 27.06.2014 வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/- கட்டணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 30.06.2014 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்கதில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 30.06.2014 திகதி பி.ப. 3.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும், நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்த 90 நாட்களுக்குச் செல்லுபடியாகும் விதத்திலும், கேள்விப் பிணைப் பொறுப்பு 120 நாட்கள் இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல. | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்தக் காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| Jk/ADM/II/CONS. WORK/ADM. BLOCK (v) | யாழ்.மாவட்டச் செயலக நான்கு மாடிக் கட்டட நிர்மாணம் பகுதி - V | 12.467 | 05 | C6 | 124,700.00 | 1000.00 |
| Jk/ADM/II/CONS. WORK/ADM. BLOCK (CHAN - I) | சங்கானைப் பிரதேச மேலதிக நிர்வாகக் கட்டட நிர்மாணம் பகுதி - I | 3.46 | 03 | C8 | 34,600.00 | 1000.00 |

சுந்தரம் அருமைநாயகம்,
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(C/3423)

## நீராவியடி தனில் வாழும் வாரணனே வரமருள்வாய்!

"தெய்வத் தமிழ்ச்சுடர்"
இராசையா ஸ்ரீதரன்



ஐங்கரனே! ஆனைமுகனே! ஆறுமுகன் சோதரனே!
ஆறுதலும் தேறுதலும் நீ எமக்குத் தர வேண்டும்!
சங்கரனின் திருமகனே! சர்வலோக நாயகனே! கஜனே!
நீராவியடி தனில் வாழும் வாரணனே! வரமருள்வாய்!
எங்களது நல்வாழ்வில் பல ஏற்றங்கள் தருபவனே!
ஏரம்ப மூர்த்தியே! நல்ல ஏழைபங்காளனே! வருக!
மங்களமாய் நாம்வாழ அசுரனை நீ சங்கரித்தாய்!
மனமார வணங்குகின்றோம்! கணபதியே சரணம்!

ஸ்ரீ ஜெயநீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய ஐந்தாம் நாள் திருவிழா இன்றாகும்.

# பெண் குருதிக்கொடையாளிகள் மிகக் குறைவாகவே உள்ளனர்

(யாழ்ப்பாணம்)


பெண்களுக்கான குருதித்தேவைகள் அதிகளவில் இருந்தாலும் பெண் குருதிக்கொடையாளிகள் மிக அரிதாகவே இருக்கின்றனர். நேற்றுமுன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற குருதிக் கொடையாளர் கௌரவிப்பில் கலந்து கொண்ட பெண் குருதிக் கொடையாளி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆணுக்கு சரிநிகராக இருக்கும் பெண்களே இந்த குருதிக் கொடையில் மட்டும் பின்னடிக்கின்றனர் ஏன் என்று புரியவில்லை.

உலகில் 90 வீதமான குருதிக் கொடையாளிகள் இருக்கும் அதேவேளை இலங்கையில் 50 வீதமானவர்களே இருக்கின்றனர். அதிலும் வடக்கில் 20 வீதமானவர்களே இரத்ததானம் வழங்குகின்றனர்.

அதிலும் 2 வீதமான பெண்களே குருதிக் கொடையாளிகளாக இருக்கின்றனர். இது கவலையான விடயம். இதனை நிவர்த்திசெய்ய அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றார். (இ,25)

# முன்னோடிப் பரீட்சைக்கு பண உதவி வழங்கல்



வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியம், முன்னோடிப்பரீட்சைக்குத் தோற்றும் உயர்தர மாணவர்களுக்கு பணஉதவியினை வழங்கியுள்ளது.

வவுனியா மாவட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் அபிவிருத்தி ஒன்றியம் 2014 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை ஒன்றை நடாத்தி அவர்களுக்கு தேவையான நிதியில் ஒரு சிறு தொகையினை வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியம் வழங்கியுள்ளது.

2013ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களிடம், வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத் தலைவரும், முன்னாள் நகரசபை உறுப்பினருமான, தேசமான்ய. சு.குமாரசாமி வழங்கி வைத்தார். (70)

## மோ.சைக்கிள் விபத்து

பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் சபாரி மோட்டார் சைக்கிளும் ஓட்டோவும் விபத்துக்குள்ளாகின.

மோட்டார் சைக்கிளில் ஒருவர் சென்றுகொண்டிருந்த வேளையில் பின்னால் வந்த ஓட்டோ மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதால் மோட்டார் சைக்கிள் சேதத்திற்குள்ளானதுடன் இந்த விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (85)


# பொதுக்கூட்டம்

(கைதடி)

கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கழகத் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் கைதடி தெற்கு சனசமூக நிலைய கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு கழக அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (90)

# லக்கி நம்பரும் கலர்க்கண்ணாடியும்




**ஒரு வாந்தியை எத்தினை தடவைதான் எடுக்கிறது பிரேமச்சந்திரா?**

வாந்தியையே பாயாசம் எண்டு நினைக்கிற ஆட்கள் இருக்கும்வரை எத்தனை தடவையும் எடுக்கலாம் மணியண்ணை.

**நேற்று (04.06.2014) நீங்கள் நீரவேலியில - உங்கட கட்சியின்ரை பிராந்தியக் கந்தோரில எடுத்த வாந்தி அந்த மாதிரி எண்டு சொல்லுகினம். ராத்திரியே இணையத்தளங்களில எல்லாம் அந்த வாந்தியைப் பாயாசமாக ஆக்கியிருந்ததைப் பார்த்தன். காலைமை பேப்பர்களைப் பாத்தால், அதை வடையோட எல்லோ சேர்த்துப் போட்டிருந்தாங்கள்.... பிரேமச்சந்திரா?**

அது நான் கடைசியாகத் தயாரிச்ச அந்த மாதிரிப் பாயாசமல்லோ..... மணியண்ணை. அதுக்கு – அரசியல் தீர்வுக்கான யோசினையை வடக்கு, கிழக்கு, புலம்பெயர் ஆட்கள் வைக்கலாம் எண்டு ஒரு ஏலக்காய் போட்டிருந்தன் பாத்தியளா...

**அதுதானே பார்த்தன். சோக்கான ஐடியா. அது சரி, எப்பிடியண்ணை இந்த ஐடியா உங்களுக்கு வந்திது?**

நாங்களாக ஒரு (அரசியல்தீர்வு) குழம்பை வைச்சால் அதுக்கு உப்புக் காணாது, புளி காணாது, உறைப்புக் காணாது எண்டு அவனவன் சொல்லிக்கொண்டிருப்பான். அதிலயும் இந்தக் கஜேந்திரன்ஸ் இருக்கினமல்லோ (கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன்) அவை முட்டையில மயிர் பிடுங்க வந்திடுவினம். அதை மடக்கத்தான் இந்த ஐடியா.... மணியண்ணை.

**உண்மையாகச் சொல்லிறன் நீங்கள் ஒரு 'மண்டை'க்காய்தான் பிரேமச்சந்திரா.**

பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குப் போகமாட்டம் எண்டதோட சேர்த்து, 13 பிளஸைப் பற்றி இவர் மோடியை வைச்சு ஒரு போடு போட்டிருந்தன் பாத்தியளா மணியண்ணை?

**13 ஆம் நம்பர் ராசியான நம்பரில்லை. ருடெரஉமல நம்பர் எண்டு ஆரும் சொல்லலாம் பிரேமச்சந்திரா... ஆனால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அது சோறு போடுகிற ஒரு நல்ல நம்பர் - நல்ல சரக்கெல்லோ பிரேமச்சந்திரா!**

அரசியல் தீர்வுக்கு உங்கட யோசினைகளை எல்லாம் அனுப்புங்கோ எண்டு, ஒரு மின்னஞ்சல் முகவரியைக் குடுத்தன் பாருங்கோ மணியண்ணை... இரவோட இரவாக நானூற்று முப்பத்தாறு பேர் ஏதோ எல்லாம் எழுதி அனுப்பியிருக்கிறாங்கள்... நம்மட பாயாசம் அந்த மாதிரித்தான் வேலை செய்யுது மணியண்ணை...

**அப்ப அடுத்த மாதத்துக்குள்ள லொறிக்கணக்காக ஆலோசனைகள் வந்து சேரும்போல.... அவ்வளவு யோசினைகளையும் ஆரப்பா படிச்சு ஆராயிறது பிரேமச்சந்திரா...?**

அதெல்லாம் அந்த மாதிரி நடக்கும் மணியண்ணை. இந்த யோசினைகளைப் படிச்சுக்கொண்டிருக்கிறம், பார்த்துக்கொண்டிருக்கிறம் எண்டு நாலு ஆறு வரிசத்தைத் தாக்காட்டலாம்... தெரிவுக்குழுவை வைச்சு மகிந்தர் விளையாடலாம் எண்டால், இந்தத் தீர்வு ஆலோசனைகளை வைச்சு நாங்கள் விளையாட மாட்டமா?

**அதெல்லாம் சரி, நீங்கள் குடுத்த மின்னஞ்சல் முகவரியின்ரை பாஸ்வேர்ட் ஆரிட்ட இருக்குப் பிரேமச்சந்திரா...!**

நாங்கள் களத்திலிறங்காமலே சிக்ஸர் அடிப்பம். ஈமெயிலைத் திறக்காமலே மின்னஞ்சல்களைப் படிப்பம். தீர்வு யோசினைகளை வைக்காமலே அதைப்பற்றிப் பேசுவம். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். எங்களுக்கு புல்லே தேவையில்லை மணியண்ணை... நாலு சொல்லுப்போதும்... நானிலத்தை ஆளுவமல்லோ...

**இதுக்கெல்லாம் ஒரு குடுப்பினை வேணும் பிரேமச்சந்திரா... எடுத்த வாந்தியையே திருப்பித்திருப்பி எடுத்து அதைப் பாயாசமாக்கிறது ஒரு கலைதானய்யா... உண்மையாகத்தான் சொல்லிறன், நீங்கள் ஒரு மகா மண்டைக்காய்தான்...**

வாந்தியோ... பேதியோ... என்ன நாசமோ... அதில ஒரு சரக்கை – தேசியம் எண்ட சொல்லைக் – கலந்து விட்டால் போதுமண்ணை... அது ஒரு கலர்க்கண்ணாடி. அந்த மாதிரிக் காட்சி காட்டும். இந்தக் கண்ணாடிக்குத்தான் நாங்கள் குடுப்பினை செய்து வைச்சம்..

**அய்யோ ராசா... அந்தக் கண்ணாடியை உடைச்சிடப்படாது எண்டுதான் இத்தினை நேத்தியோ... அது போதாதெண்டு... இந்தப் 13 ஆம் நம்பரிலயும் ஒரு தோட்டா வந்திருக்கோ... நல்லாயிருக்குப் பிரமேச்சந்திரா... நல்லாயிருக்கு... அடிச்சிருக்கு உங்களுக்கு அப்பிடியொரு யோகம்....**

நாப்பது வருசமாய் நான் உழைச்ச உழைப்பில கிடைச்ச லாபம் இதுதான் – இந்த லக்கி நம்பரும் கலர்க்கண்ணாடியும்தான் அண்ணை. இது போதுமண்ணை.... என்ரை ஆயுளுக்கும்..

**இது உங்களுக்கு மட்டுமில்லைப் பிரமேச்சந்திரா... உங்களோட ஒத்த அத்தினை பேருக்கும் அடிச்ச யோகம் இதெண்டு சொல்லுங்கோ. இந்த (13) லக்கி நம்பருக்கும் (தமிழ்த்தேசியக்) கலர்க்கண்ணாடிக்கும் ஒரு வாழ்த்துச் சொல்லுங்கோ.... இதோ இன்னொண்டையும் சொல்லிறன், நீங்கள் வாந்தியை எடுக்க எடுக்க அதைப் பாயாசமாக்கிறதுக்கு ஆயிரம் பேர் இருக்கு மட்டும் உங்களுக்கு ஒரு குறையுமில்லைப் பிரமேச்சந்திரா... எப்பவும் உங்கட காட்டில மழைதான். குருச்சந்திரயோகம், வெள்ளிதிசை எல்லாம் உங்கட பொக்கற்றுக்குள்ளதான் கிடக்குது... வாழ்க...**

கவலை நம் சவப்பெட்டிக்கு ஓர் ஆணி சேர்க்கிறது. கலகலவெனும் சிரிப்பு ஓர் ஆணியை கழற்றுகிறது -பீட்டர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கடைசியில் நாம் இவ்வளவுதானா?

அறங்களிலேயே தலைசிறந்ததாகக் கருதப்பட்ட கல்வி என்பது இப்போது வியாபாரப் பொருளாகிவிட்டது. பணம் இருந்தால்தான் படிக்கவே முடியும் என்ற நிலை உருவாகிவிட்டது. "படிப்பு" என்பதே பணம் சம்பாதிப்பதற்கான ஒரு தொழில் என்றே பெற்றோரும், மற்றோரும் எண்ணுகின்றனர்.

கற்பது ஒழுக்கமும், பண்பாடும், மனித நேயமும் வளர்வதற்கென்று யாராவது, எப்போதாவது நினைத்ததுண்டா? சமத்துவத்தையும், சமநீதியையும் நோக்கி இந்தக் கல்விமுறை ஏழை, எளிய மக்களை அழைத்துப் போகவில்லை. மாறாக, பெரும்பான்மையான மக்களிடமிருந்து அந்நியப்பட்டுப் போயிருக்கிறது.

இலவசக் கல்வி, இலவசப் பாடநூல்கள், இலவசச் சீருடைகள், இலவச உணவு என கல்வி அடித்தள மக்களிடமும் சென்று சேர பல்வேறு அரச திட்டங்கள் உதவுவது உண்மைதான். ஆனால் கல்விமுறை என்னவோ ஏட்டுச் சுரைக்காயாகவே தொடர்வதை மாற்றிவிட முடியவில்லை.

தன்னைச் சுற்றியிருக்கும் மனிதர்களைப் பற்றியே கவலைப்படாத ஒரு புதிய சமுதாயத்தை இந்தக் கல்விமுறை வளர்த்து வருகிறது. "மாதா பிதா குரு தெய்வம்" என்பதே அவர்களுக்குப் புரியாத போது, மற்றவர்களைச் சமமாக மதித்தல், சமூகவாழ்வுக்கான கூட்டுப் பொறுப்புணர்வு எனபதையெல்லாம் புரியவைக்குமா இந்தக் கல்வி?

பரந்த உள்ளமும், பண்பாடும் வளர்க்க வேண்டிய கல்விமுறை பணம் பண்ணும் தொழிலாகச் சுருங்கிவிட்டது. மனித மாண்புகளை வளர்ப்பதற்குப் பதிலாக, மதிப்பெண் வாங்கும் இயந்திரமாக மனிதர்களை மாற்றிவிட்டது. இயந்திரம் போல இதயம் இல்லாத மாணவர்களை உருவாக்குவதால் என்ன பயன்?

மனித நேயமற்ற போக்கையே இந்தக் கல்விமுறை வளர்த்தெடுக்கிறது. "யாருக்கு, எங்கே எது நடந்தாலும் கண்டு கொள்ளாதே" என்பதுதான் இந்தக் கல்வி அவர்களுக்கு கற்றுக்கொடுத்த பாடம். இந்தப் பாடத்திட்டம்தான் காலாகாலமாக இங்கே நடத்தப்படுகிறது.

பல பாடசாலைகளில் நூலகம் என்பதே இல்லை. இருந்தாலும் அவை செயற்படுவதே இல்லை. மாணவர்கள் அதற்கு ஊக்குவிக்கப்படுவதில்லை. கேள்வியும் பதிலுமாக பாடமாக்கி பரீட்சைக்குத் தயாராகுவது தவிர, வேறு புத்தகங்களோ சிந்தனைகளோ மாணவர்களுக்கு வேண்டாத ஒழுக்கமாகவே ஆகிவிட்டது.

கல்விச்சாலை பெருகினால் சிறைச்சாலைகள் குறையும், குறைய வேண்டும் என்பதுதான் நியதி இங்கே கல்விச்சாலைகளும் பெருகுகின்றன; சிறைச்சாலைகளும் நிரம்பி வழிகின்றன. இந்தச் சமுதாயத்தின் சீர்கேடுகளுக்குத் தீர்வு காண வேண்டாமா?

கல்வியை வழங்கும் பள்ளிக் கூடங்களையே உண்மையில் நாம் கோயில்களாகக் கருத வேண்டும் என்பது முப்பாட்டன் காலத்திலிருந்தே வலியுறுத்தப்பட்டு வருவதுதான். இதுமட்டுமல்ல, நமது வாழ்வின் முன்னேற்றத்தைக் கவனித்துக் கொள்ள நாம் ஆற்ற வேண்டிய எத்தனையோ பணிகள் முன்னால் இருக்கின்றன.

அதையெல்லாம் விட்டுவிட்டு, நாமோ நம்மைப் போரில் வென்றுவிட்டவர்களுக்கு, யாரை இறைஞ்சியேனும் தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டால் திருப்தியடைந்து விடலாம் என்று, சமூகத்திற்குத் தேவையான மற்றதனைத்தையும் கோட்டை விட்டுக்கொண்டு அலைகிறோம்.

வாழ்வதை விட வஞ்சம் தீர்ப்பதே நமக்குப் பெரிதாய்த் தெரிகிறது. கல்வியிற் சிறந்த சமூகம் என்று பெருமைப்பட்டு வந்திருக்கும் நாம் கடைசியில் இப்படித்தான் இருக்கிறோமா?

நம் மனங்களில் குடிகொண்டிருக்கும் வன்மத்தை விடத் தெரியாமல், நமக்கான புதிய வாழ்க்கையையும் அமைத்துக்கொள்ளத் தெரியாமல், இப்படியே நம் வாழ்வைச் சீரழித்து யாரைப் பழிவாங்கித் திருப்திகொள்ளப் போகிறோம்? - ஆசிரியர்.

# ஜனநாயகக்கட்சியின் வாக்குபலத்தை குறைத்து மதிப்பீடு செய்யக்கூடாது

## -சரத்பொன்சேகா தெரிவிப்பு-

(கொழும்பு)

ஜனநாயகக் கட்சியின் வாக்கு பலத்தை குறைத்து மதிப்பீடு செய்ய முடியாது என அக்கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

. கொழும்பு, கோட்டை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்

ஜனநாயகக் கட்சிக்கு பத்து இலட்சம் வாக்காளர்கள் ஆதரவளித்து வருகின்றனர்.

ஜே.வி.பி. கட்சிக்கும் ஆறு லட்சம் வரையிலான வாக்காளர்கள் ஆதரவளித்து வருகின்றனர்.

நாட்டின் பிரதான இரண்டு அரசியல் கட்சிகளுக்கு அடுத்த நிலையில் ஜே.வி.பி மற்றும் ஜனநாயகக் கட்சி ஆகியன திகழ்கின்றன.

எனவே, ஜனநாயகக் கட்சியை எவரும் குறைத்து மதிப்பீடு செய்ய முடியாது.

பொதுத் தேர்தலுக்கு சென்றாலும் , ஜனாதிபதி தேர்தலுக்கு சென்றாலும் எமது பலத்தை யாராலும் மறந்து விட முடியாது.

அரசியல் சாசனத்தை மாற்றுவதாகவும், நிபந்தனைகளை விதிப்பதாகவும் தேவதைக் கதைகளைக் கூறி வரும் சில கட்சிகளுக்கு காய்ச்சல் எடுக்கத் தொடங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 132 முன்னாள் புலிகளுக்கு மட்டுமே புனர்வாழ்வளிக்க வேண்டும்

## -புனர்வாழ்வு ஆணையாளர் தகவல்-

(கொழும்பு)

132 முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கே தற்போது புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்ற போது, 12000 முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் சரணடைந்தும், கைதுசெய்யப்பட்டும் இருந்ததாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஜகத் விஜேதிலக்க தெரிவித்துள்ளார்.

அவர்களில் தற்போது 132 பேருக்கு வவுனியா முகாம்களில் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியுள்ளது.

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை, புனர்வாழ்வளிக்கப்பட்ட குழுவினர் சமூகத்தில் இணைக்கப்பட்டனர், அடுத்த குழு இம் மாதம் விடுவிக்கப்படலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்ட, 230 பேர் உயர் கல்வியைத் தொடர தகுதி பெற்றுள்ளனர், பல்கலைக்கழகங்களில் 35 பேர் உயர்கல்வியைத் தொடர்ந்து வருவதாகவும் மேலும் தெரிவித்தார்.

# ஆடைத்தொழிற்துறையில் 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட வெற்றிடங்கள்

இலங்கையின் முன்னணி ஏற்றுமதித் துறையாக விளங்கும் ஆடை உற்பத்தி தொழிற்சாலையில், வேலைக்கு ஆள் தேவைப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை விவரம் பற்றி சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் பொதுசேவை தொழிலாளர் ஒன்றியத்தின் இணைச் செயலர் அன்ரன் மார்க்கஸ் வெளியிட்டுள்ளார்.

வெற்றிடங்களின் எண்ணிக்கை பதினையாயிரம் என்ற நிலை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே இருந்ததாகவும், தற்போது அது மிகவும் அதிகமாக இருக்கலாம் என்றும் மார்க்கஸ் கூறினார்.

ஆயத்த ஆடை தொழிற்துறையில் அதிகமாக வேலைசெய்பவர்கள் பெண்களே என்றும், பல விதமான சுரண்டல்களுக்கு அவர்கள் ஆளாகி வருகின்றனர்.

ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த முதலாளிமார்கள் தொழிலாளர் சுரண்டலில் ஈடுபடுவதை அரசாங்கம் கண்டும் காணாமல் உள்ளது என்றார்.

# கிருமிநாசினியற்ற தேசியஉணவு திருமண வைபவங்களுக்கு அறிமுகம்

(கொழும்பு)

கிருமி நாசினிகளி கலப்படமற்ற உணவு வேளை ஒன்றை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக விவசாய பிரதி அமைச்சர் வை.ஜீ.பத்மசிறி தெரிவித்தார்.

திருமண வைபவம் ஒன்றுக்காக தேசிய உணவு வேளையை அறிமுகஞ்செய்யும் செய்தியாளர் மாநாடு அங்குருவெல்ல பிரதேசத்தில் நடைபெற்றது. இச் செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும் போதே பிரதி அமைச்சர் வை.ஜீ.பத்மசிறி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு பிரதி அமைச்சர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்.கிருமி நாசினிகள் பாவனையின் காரணமாக இன்று மக்கள் கிருமி நாசினிகள் கலந்த உணவு வகைகளை உட்கொள்ளவே பழக்கப்பட்டுள்ளனர். இதனால் பல்வேறு நோய்களுக்கு ஆளாக நேரிடுகின்றது.

இதனைக்கருத்திற் கொண்டே விவசாய அமைச்சு தமது அமைச்சின் கீழ் இயங்கும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து திருமண வைபவம் ஒன்றுக்கான உள்ளூர் உணவு வேளையை அறிமுகஞ்செய்ய நடவடிக்கை எடுத்தது எனக் குறிப்பிட்டார்.

விவசாயத்துறைசார்ந்த நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்துக் கொண்டனர்

# ஊழலை ஒழிப்பது குறித்து வவுனியாவில் கருத்தரங்கு

ஊழலை இல்லாது ஒழிப்பது தொடர்பான கருத்தரங்கு வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இக்கருத்தரங்கின் போது இலங்கையில் இடம்பெறும் ஊழல்கள் இவை இடம்பெறும் பிரதேசங்கள் அவற்றை இல்லாதொழிப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

அரச திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு ஊழல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்படட இக்கருத்தரங்கில் வவுனியா வடக்கு பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கிராம சேவகர்கள் உட்பட துறைசார் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

வவுனியா வடக்கு உதவி செயலாளர் வி.ஆயகுலன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் ட்ரான்ஸ்பேரன்றி இன்டர்நெஷனல் வடமாகாண இணைப்பாளர் ரவீந்திர டி.சில்வாவும் கலந்துகொண்டார்.

# அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்களும் அதை தடுப்பதற்கான வழிமுறைகளும்

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள். எதிர்காலத்தில் பல்வேறு பதவிகளை அலங்கரிக்கப் போகிறவர்கள். இத்தகைய சிறுவர்களுக்கு ஒரு ஒளிமயமான, பாதுகாப்பான ஒழுக்கம் நிறைந்த சமூகத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது சமூகத்தில் உள்ளவர்களின் கடமை ஆகும். எனினும் இவ்வாறான ஒழுக்கம் நிறைந்த சமூகத்தை உருவாக்குவதில் தடையாக எதிர்கொள்ளப்படுகின்ற சவாலாக சிறுவர் துஷ்பிரயோகம் இன்று காணப்படுகிறது.

அண்மைக் காலத்தில் இலங்கையில் பரவலாக சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்து வந்தாலும் குறிப்பாக, தற்போது தமிழர் வாழும் பிரதேசங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துச் செல்கிறது. அண்மையில் மே மாதம் 10ஆம் திகதி நெடுந்தீவில் நபர் ஒருவர் இரு சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு அதிகரித்துச் செல்கின்ற துஷ்பிரயோகத்தினைத் தடுப்பதற்கு சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் என்ன? அது எவ்வாறு ஏற்படுகிறது? அதை தடுப்பதற்கான வழிமுறைகள் என்ன? என்பன பற்றி அறிந்து கொள்ளுதல் அவசியம்.

**மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் பிற உயிர்கள் மீது அன்பு உடையவர்களாகவும், அவர்களை துன்புறுத்தாதும் வாழ வேண்டும் என்றே எல்லா மதங்களும் குறிப்பிடுகின்றன.**

முதலில் சிறுவர் என்பவர் யார்? 1989இல் ஐக்கிய நாடுகள் சபையினால் உருவாக்கப்பட்ட சிறுவர் உரிமை பிரகடனத்தின் படி சிறுவர்கள் என்பவர்கள் 18 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலரும் ஆவார்கள் எனவும் இவர்கள் வெள்ளை மனம் படைத்தவர்களாகவும் கள்ளம் கபடமற்றவர்களாகவும் அன்பை எதிர்பார்ப்பவர்களாகவும், இனிப்பு சுவையை அதிகம் விரும்புவர்களாகவும், பாகுபாடுகள் பற்றி சிந்திக்கத் தெரியாதவர்களாகவும் காணப்படுவார்கள் எனக் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறான 18 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களின் அறியாமையைப் பயன்படுத்தி உடலியல் ரீதியாகவோ, உளரீதியாகவோ அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தச் செய்வது அல்லது தவறாக வழிநடத்துவது சிறுவர் துஷ்பிரயோகம் ஆகும். அதாவது அவர்களின் ஆரோக்கியத்திற்கும், உய்விற்கும், அபிவிருத்திக்கும், கௌரவத்திற்கும் விரோதமாக தீங்கு ஏற்படுத்துகின்ற எல்லா வகையான உடல் சார்ந்த உணர்ச்சி ரீதியான துன்பப்படுத்தல் துஷ்பிரயோகம் ஆகும்.

ஐக்கிய நாடுகள் சபை சிறுவர்களிற்கு என உயிர் வாழும் உரிமை, கல்வி, கற்கும் உரிமை, அன்பாக வளரும் உரிமை, கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை எனப் பல உரிமைகள் உண்டு எனக் குறிப்பிடுகிறது.

இவ்வாறான சிறுவர்களின் உரிமைகளை பிள்ளைகளுக்கு கிடைக்கவிடாது செய்தல், அவர்களின் உரிமைகளைப் பறித்தல்கூட சிறுவர் துஷ்பிரயோகம் ஆகும்.

சிறுவர் துஷ்பிரயோகமானது பின்வரும் வகைகளில் காணப்படுகிறது:

01) உடல் ரீதியான துஷ்பிரயோகம்
02) உள ரீதியான துஷ்பிரயோகம்
03) பாலியல் ரீதியான துஷ்பிரயோகம்
04) புறக்கணித்தல்

**நாளைய தலைவர்கள். எதிர்காலத்தில் பல்வேறு பதவிகளை அலங்கரிக்கப் போகிறவர்கள். இத்தகைய சிறுவர்களுக்கு ஒரு ஒளிமயமான, பாதுகாப்பான ஒழுக்கம் நிறைந்த சமூகத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது சமூகத்தில் உள்ளவர்களின் கடமை ஆகும்.**

உடல் ரீதியான துஷ்பிரயோகம் என்பது வேண்டுமென்றே பிள்ளைகளது உயிர் வாழ்க்கைக்கு, அபிவிருத்திக்கு, சுயகௌரவத்திற்கு பாதிப்பு ஏற்படக் கூடிய வகையில் உடல் பலத்தை பிரயோகிப்பது ஆகும். அடித்தல், உதைத்தல், தொல்லை தரும் வகையில் உடலை உலுக்குதல், அடிமை வேலைக்காரராக ஈடுபடுத்தல், கடத்திச் செல்லல், நஞ்சூட்டல், மூச்சுத் திணறலை ஏற்படுத்தல், சிறுவர்களை பாலியல் தொழிலாளராக விற்பனை செய்தல் போன்றன.

உள ரீதியான துஷ்பிரயோகம் என்பது பிள்ளைகள் தொடர்பிலான எதிர்மறையான மனோபாவங்களை அவர்களுக்கு உருவாக்குதல் ஆகும். வாய் மொழி மூலம் குற்றச்சாட்டுதல், அச்சுறுத்தல், அவமதித்தல், குழந்தைகளின் உணர்ச்சியை மதிக்காமை, சமூகத் தொடர்பை துண்டித்தல், பயமுறுத்தல், பிள்ளைகளின் கருத்துக்களை கேட்காமல் விடுதல், தனிமைப்படுத்தல், பிள்ளைகளின் முன்னிலையில் பெற்றோர் பாலியல் செயல்களில் ஈடுபடல் போன்ற செயற்பாடுகள்.

பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் என்பது சிறுவர்களை புரிந்துணர்வற்ற பாலியற் செயல்களில் ஈடுபடுத்தல் அல்லது தூண்டும் செயல்கள். பாலியல் உறவுக்காக தொந்தரவு செய்தல், குழந்தைகள் குளிக்கும்போது மறைந்திருந்து பார்த்தல், ஆபாச படங்களைக் காண்பித்தல், தீண்டத்தகாத உறுப்புக்களை தொடுதல், வன்புணர்ச்சி, தன்னினச் சேர்க்கை என்பவற்றில் ஈடுபடுத்தல் போன்றன. அந்நியர்களால் மட்டும் அல்ல, நெருங்கிய உறவினர்களால்கூட பாலியல் துஷ்பிரயோகம் ஏற்படும் என்பதை பெற்றோர் அறிந்திருத்தல் வேண்டும்.

புறக்கணித்தல் என்பது பிள்ளையின் அபிவிருத்திக்கு அவசியமான தேவைப்பாடுகளை நிறைவேற்றாமல் விடுதல் ஆகும். உடல் ரீதியான புறக்கணித்தல் என்பது பிள்ளைகளுக்கு வேண்டுமென்றே போசாக்கு வழங்காமை, நோயுற்றவிடத்து சிகிச்சை அளிக்காமை, உடல் ரீதியான சமூக விபத்துக்களில் இருந்துபிள்ளையை மீட்காமை என்பன. உள ரீதியான புறக்கணித்தலினுள் பிள்ளைகளுக்கு தேவையான அன்பையும் பாசத்தையும் வழங்காமை அடங்குகின்றது.


**சிறுவர்களிற்கு துஷ்பிரயோகம் ஏற்பட்டால் எவ்வாறான விளைவுகள் ஏற்படும் என்பதனை அனைவரும் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும்.**

உடனடிப் பாதிப்புக்களை மட்டும் அன்றி அவர்களின் முழு வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு ஆளானால் அப்பிள்ளையின் உடல் நிறைகுறைவடைதல், தூக்கம் இன்மை, தலைவலியும் சுவாசப் பிரச்சினையும், பதற்றம் ஏற்படுதல், வாயினால் சொல்ல முடியாத நோவும் வீக்கமும், பால்வினைத் தொற்றுநோய், உடல் காயங்கள் (இனப் பெருக்க உறுப்புகளில் கிழிவு, இரத்தப் பெருக்கு ஏற்பட்டால் உயிர் ஆபத்துக் கூட ஏற்படும்.) சிறு வயதில் கர்ப்பமடைகின்ற நிலை. அத்தோடு பலோப்பியன் குழாய் சுருக்கமடைந்தால் பிள்ளைக்கு பிற்காலத்தில் மலட்டு நிலை ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு.

உளவியல் ரீதியான பாதிப்புகளாக அடிக்கடி கனவு காணுதல், கோபம் அதிகரித்தல், வன்முறை எண்ணம், வெட்கம், குற்ற உணர்வால் தவித்தல், மனச்சோர்வு, தற்கொலைக்கு முயற்சித்தல், தனிமையை விரும்புதல், தீய பழகத்திற்கு அடிமை ஆதல், வீட்டை வீட்டு வெளியேற முயற்சித்தல்....

சிறுவர் துஷ்பிரயோகம் ஏற்பட்டால் நாம் யாது செய்ய வேண்டும் என்பதையும் அறிந்திருத்தல் அவசியமாகும்.

முதலில் அந்தப் பிள்ளையை தனிமைப்படுத்துதல், புறக்கணித்தல் போன்றவற்றைச் செய்யாது பிள்ளையை அரவணைக்க வேண்டும்.



பெற்றோர் முதல் செலுத்திய அன்பை விட அதிகமாக அன்பைச் செலுத்த வேண்டும்.

பிள்ளையை வைத்தியசாலையில் அனுமதித்து விசேட மருத்துவ பரிசோதனை செய்தல். பின்னர் வைத்தியசாலை மூலம் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யலாம்.

பிள்ளைக்கும் நடந்த துஷ்பிரயோகத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை பிள்ளைக்கு பெற்றோர் உணர்த்த வேண்டும்.

பிள்ளைக்கு தாங்கள் இருக்கின்றோம் என்பதனை உணர்த்தி அன்பை செலுத்தி உளவள ஆலோசனை வழங்கி கவனமாக வளர்ப்பதன் மூலம் அப்பிள்ளையை ஆளுமை மிக்க ஒருவராக மாற்ற முடியும்.

இலங்கையில் தினமும் ஏதோ ஒரு இடத்தில் குறைந்தது ஒரு சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவம் ஆயினும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. இவ்வாறு இது அதிகரித்துச் செல்கின்றமைக்கான காரணங்களாக பின்வருவன காணப்படுகின்றன.

பெற்றோருக்கும், சமூகத்தவருக்கும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக உள்ள அறியாமையும், அக்கறை இன்மையும்.

சிறுவர்களுக்கு உடல் உள, பாலுணர்வு பற்றிய விழிப்புணர்வு இல்லாமை.

மது, போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களின் அதிகரிப்பு.

பெற்றோர் பிள்ளைகளை தனிமையில் விட்டுவிட்டு வேலைக்குச் செல்லல்.

பிள்ளைகளை உறவினர் வீடுகளில் தங்க விடுதல்.

தனியாக அனுப்புதல்.

ஆன்மீக செயற்பாடுகளில் பெரிதாக ஈடுபாடு கொள்ளாத தன்மை அதிகரித்தல்.

பதின்ம வயதில் ஏற்படும் காதல்.

பெற்றோர் பிள்ளைகளின் செயல்களில் அக்கறை இல்லாமல் கண்காணிக்காமல் விடுதல்.

அகதி வாழ்வு.

தவறான இணையத்தளப் பாவனை, அதிகரித்து வரும் கைத்தொலைபேசி பாவனை போன்றன இன்று சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்து செல்லக் காரணங்கள் ஆகும்.

இவ்வாறு நாளுக்கு நாள் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துச் செல்லுமேயானால், எதிர்காலத்தில் எமது பண்பாட்டுக்கு சவாலாக அமைகின்ற வன்முறையுடன் கூடிய ஒரு சீர்கேடான சமூகம் உருவாவதை யாராலும் தடுக்க முடியாது. ஆகவே இச்சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க வேண்டியது சமூகத்தில் உள்ள அனைவரதும் கடமை ஆகும்.

பிள்ளைகளுக்கு சிறு வயது முதலே பெற்றோரும், ஆசிரியர்களும் நன்மையானது எது? தீமையானது எது? சரி எது? பிழை எது? என்பதை ஆராய்கின்ற ஒழுக்கக் கல்வியைப் போதிக்க வேண்டும்.

பண்பாட்டு ஒழுக்க விழுமியங்களைச் சொல்லிக் கொடுத்தல் வேண்டும்.

நல்ல தொடுகை எது? கெட்ட தொடுகை எது? தீண்டத்தக்க உறுப்பு எது? தீண்டத்தகாத உறுப்பு எது? என்பதை பெற்றோர் எடுத்துக் கூறவேண்டும்.

சிறுவர் உரிமை, துஷ்பிரயோகங்கள் பற்றிய விளக்கங்களை சிறிய வகுப்புக்களில் இருந்தே எடுத்துக்கூற வேண்டும்.

பிள்ளைகளிடத்தே எமது உடல் எம்முடையது யாரும் உரிமையுடன் ஸ்பரிசிப்பதற்கு அனுமதிக்கக்கூடாது. குறிப்பாக உள்ளாடை மூடப்பட்ட பகுதிகளைத் தொட இடம் கொடுக்கக்கூடாது என்பதை உணர்த்த வேண்டும்.

பெற்றோருக்கு தெரியாமல் சந்தேகமான மற்றவர்களிடம் இருந்து பரிசுப் பொருட்களை, இனிப்பு பொருட்களை பெற்றுக் கொள்ளக்கூடாது என்பதைக் கூறவேண்டும்.

சிறுவர் அமைப்புகளோடு இணைந்து அனைவரும் செயற்படுவதன் மூலம் சிறுவர்களை பாதுகாக்க முடியும். குறிப்பாக, கிராம மட்டத்தில் கிராம அலுவரை தலைமையாகக் கொண்டு குழு அமைத்து சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக கவனம் எடுக்க முடியும்.

சிறுவர் துஷ்பிரயோகம் சார்ந்த வழக்குகளிற்கு காலம் தாழ்த்தாது தீர்வுகளை வழங்கி தண்டனை வழங்க வேண்டும்.

சிறுவர் துஷ்பிரயோகங்களை மேற்கொள்ளும் வக்கிரக்குணம் கொண்டவர்களுக்கு பகிரங்கமாகத் தண்டனை வழங்கும் சட்டமும் வரவேண்டும்.

கிரேக்க மெய்யியலாளரான அரிஸ்ரோட்டில் குறிப்பிட்டது போல், மனிதன் வாழ்ந்தால் மட்டும் போதாது. ஒவ்வொரு மனிதனும் அவரவர் நலன்களைப் பாதுகாப்பது போன்று பிறர் நலமும் பாதுகாத்து வாழ்வதுதான் ஒவ்வொருவரின் உரிமை.

அதற்கிணங்க ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களின் நலன் குறிப்பாக சிறுவர் நலன்களைப் பாதுகாப்பதன் மூலம் துஷ்பிரயோகம் அற்ற ஒரு மகிழ்ச்சிகரமான சிறுவர் பராயத்தை வழங்குவதோடு எதிர்காலத்தில் ஒரு ஒழுக்கம் நிறைந்த சமூகத்தை சிறுவர்களுக்காக வழங்குவது சமூகத்தில் உள்ளவர்களின் கடமையாகும்.



**மயூரி சகாதேவன்,**
3ஆம் வருடம்
மெய்யியற்றுறை
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

## ஒரு இலட்சத்தை தாண்டியது வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோர் தொகை



சீரற்ற வானிலையால் ஒரு இலட்சத்து ஏழாயிரத்து 300 இற்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

இதுவரை 23 மரணங்கள் பதிவாகியுள்ளதாவும், 12 பேர் காயமடைந்துள்ளதாகவும், ஒருவர் காணாமற்போயுள்ளதாகவும் நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

179 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. ஆயிரத்து 142 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

25,809 பேர் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து, 128 தற்காலிக இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இடர் முகாமைத்துவ அமைச்சுடன் இணைந்து சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

தேசிய கட்டட ஆய்வு நிலையம் வெளியிட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளது. களுத்துறை, இரத்தினபுரி, காலி, கேகாலை, பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றார்.

## தனி ஈழம் அமைக்கும் முனைப்புக்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக்கூடாது

### ஐக்கிய தேசியக் கட்சி போர்க்கொடி



தனி ஈழம் அமைக்கும் முனைபபுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. தனி ஈழமொன்றை அமைப்பது குறித்து இலங்கை மற்றும் புலம்பெயர் வாழ் தமிழர்களுக்கு மத்தியில் சர்ஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென தமிழக முதல்வர் ஜெயலிதா, இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரியுள்ளார். எனினும், இந்தக் கோரிககை ஏற்புடையதல்ல என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய இலங்கை மற்றும் நாட்டின் பௌதீக ஒருமைப்பாடு ஆகியன தொடர்பில் எவ்வித மாற்றுக் கருத்துக்களும் கிடையாது.

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு ஆகும்.

இலங்கை விவகாரங்களில் சர்வதேச நாடுகளின் தலையீட்டை ஏற்றுக்கொள்ளமுடியாது.

தற்போதைய அரசாங்கம் ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதனாலும், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை நீடிப்பதனாலும சர்வதேச நாடுகள் இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்து வருகின்றது.

சொந்த நாட்டு மக்களின் மனித உரிமைகளையே இலங்கை அரசாங்கம் மீறி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டுமாயின் நீதிமன்றம் சுயாதீனமாக இயங்க வேண்டும் என்றார்.

## தென்அதிவேக நெடுஞ்சாலை ஆகஸ்டில் மூன்றாம்கட்டப்பணி




மாத்தறை கொடகமவிலிருந்து அம்பாந்தோட்டை வரையான தென் அதிவேகபாதையின் மூன்றாவது கட்ட நிர்மாணப் பணிகளை ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பெருந்தெருக்கள், துறைமுக நகர அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

96 மீற்றர் கொண்ட இப் பாதையை நிர்மாணிப்பதற்காக ரூபா இருபதாயிரத்து இருநூறு (26,200) கோடி ரூபா செலவாவதாக குறிப்பிடப்படுகின்றது.

அது பூர்த்தியடைந்தும் அம்பாந்தோட்டை - மட்டக்களப்பு வரையிலான அதிவேக பாதைக்கான நிர்மாணிப்புப் பணிகளை ஆரம்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ஆட்கடத்தலைத் தவிர்ப்பதற்கு ரோந்துப் படகு அன்பளிப்பு

### இலங்கை - அவுஸ்ரேலியா ஒப்பந்தம்



அவுஸ்ரேலியா அரசாங்கம் இரண்டாவது ரோந்துப் படகை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்குவதற்கான ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கையின் சார்பில் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ஜயனாத் கொலம்பகேயும் அவுஸ்ரேலியா சார்பில் இலங்கைகான அவுஸ்ரேலியா உயர் ஸ்தானிகர் ரொபின் மூடி ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

கொழும்பிலுள்ள கடற்படை தலைமையகத்தில் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்வில் கடற்படையின் நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் நெயில் ரொசெய்ரோ, கடற்படையின் திட்ட மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் கொமொடோர சமந்த விமலதுங்க, அவுஸ்ரேலியாவின் சுங்கம் மற்றும் கரையோர பாதுகாப்புச் சேவை பிரிவைச் சேர்ந்த சூஈ நைட் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் நடைபெற்ற பொது நலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் பங்குகொள்ள இலங்கைக்கு வருகைதந்த அவுஸ்ரேலிய பிரதமர் டொனி அபோர்ட், கொழும்புத்துறை முகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த இலங்கை கடற்படையின் சயுர என்ற கப்பலை 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி பார்வையிட்டதுடன் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோததாபய ராஜபக்ஷவின் பங்கு பற்றலுடன் அங்கு நடைபெற்ற உயர்மட்ட கூட்டம் ஒன்றிலும் கலந்து கொண்டார்.

இதன்போது சட்டவிரோத ஆட் கடத்தல் செயற்பாடுகளை தடுக்க இலங்கை கடற்படையினர் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு பாராட்டு தெரிவித்த அவுஸ்ரேலிய பிரதமர், இலஙகை கடற்படையின் கடல்ரோந்து நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கும் வகையில் இரண்டு ரோந்துப் படகுகளை அன்பளிப்பு செயவதாகவும் வாக்குறுதியளித்தார்.

இவ்வாறு வாக்குறுதியளித்த படகுகளில் முதலாவது ரோந்துப் படகு அவுஸ்ரேலியாவில் வைத்து இவ்வருடம் ஏப்ரல் மாதம் அன்பளிப்பாக உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டதையடுத்து ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி முதலாவது படகு கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. இதற்கு பி- 350 எனப் பெயரிடப்பட்டது.

இந்தக் கப்பல் விசாலமான இந்து சமுத்திரத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரத்த பரிமாற்று கின்னஸ் சாதனைக்காக 50 ஆயிரம் கையெழுத்துக்கள் திரட்டல்

தேசிய இரத்த பரிமாற்றுச் சேவையை கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடிக்கச் செய்ய 50,000 கையொப்பங்கள் திரட்டப்பட்டுள்ளதுடன் அதன் முதல் கையொப்பத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கினார்.

அலரிமாளிகையில் இடம் பெற்ற இந்நிகழ்வின் போது தேசிய இரத்தப் பரிமாற்றுச் சேவைக் கொடியில் ஜனாதிபதி தமது முதல் கையெழுத்தை வைத்து இச் செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்தார். பிரதி வருடமும் ஜுன் 14 ஆம் திகதி நினைவு கூரப்படும் உலக இரத்த தான நன்கொடையாளர்கள் தினம் இம்முறை இலங்கையில் நடைபெறவுள்ளது.

இலங்கையில் இரத்ததானம் செய்வோர் தொகை நூற்றுக்கு நூறு வீதத்தில் அதிகரித்துள்ளமை மற்றும் இரத்த வங்கிச் சேவைக்கு கிடைத்துள்ள நன்மதிப்பை கருத்திக்கொண்டே இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து சுகாதார அமைச்சு, தேசிய இரத்த வங்கி மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியன இணைந்து ஒருவார நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளன.

இதற்கிணங்க நேற்றுமுன் தினம் முதல் நாட்டின் பல பிரதேசங்களிலுமிருந்தும் வாகன ஊர்தி பவனிகளும் இடம்பெறவுளளன. யாழ்ப்பாணம், அம்பாநதோட்டை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து இந்த வாகன ஊர்திப்பவனி இடம்பெறவுள்ளது.

இதன்போது நாடளாவிய ரீதியிலுள்ள சுயாதீன இரத்த தான நன்கொடையாளர்களை பாராட்டும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடிக்கும் நோக்கில் இரத்த வங்கிச் சேவைக் கொடியில் நாட்டின் நாலா பாகமும் இருந்து 50,000 கையொப்பங்களைச் சேகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இச்செயற்பாட்டை ஆரம்பிக்கும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கையொப்பமும் ஆசிர்வாதமும் பெறப்பட்டுள்ளன.

அலரிமாளிகையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேன, எஸ்.பி.திஸாநாயக்க ஆகியோர் உட்பட அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

## 400 கிராம் பால்மாவை 386 ரூபாவுக்கு வழங்குவது கடினம்

### வரி அதிகரிப்பால் உற்பத்தி நிறுவனங்கள் கவலை

இறக்குமதி பால்மாக்களுக்கான வரி அதிகரிப்பு காரணமாக 400 கிராம் பால்மா பைக்கற்று ஒன்றின் விலையை ரூபா 386 இற்கு வழங்குவதற்கு கடினமானது என பால்மா உற்பத்தி நிறுவனங்கள் குறிப்பிடுகின்றன.

தற்போதைய சந்தையில் பால்மாவின் விலை குறைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டாலும், அதன் நன்மையை பால்மா நிறுவனங்களோ, இறக்குமதியாளர்களோ இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை எனவும் அவ்வாறான நிலைமையில் தீர்வை வரியை ரூபா 25 இனால் குறைப்பதானது அநீதியானது எனவும் பால்மா நிறுவனங்கள் குறிப்பிடுகின்றன.

கடந்த காலங்களில் உலக சந்தையில் பால்மாவின் விலை அதிகரித்தபோது, பால்மாவின் விலையை அதிகரிப்பதற்கு நிறுவனம் அனுமதி கோரியிருந்தாலும், ஒன்றரை ஆண்டுகள் வரை விலை அதிகரிப்புக்கு அனுமதி வழங்காமை பாரிய நடடத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் தெளிவுறுத்துகின்றது.

## பக்தர்களை பாதுகாக்க 15 சுழியோடிகள் பணியில்

பொசன் பௌர்ணமி தினத்தில் சமயவழிபாடுகளில் ஈடுபடும் நோக்கில் அநுராதபுரம் செல்லும் பக்தர்கள் குளங்களில் குளிக்கும்போது ஏற்படும் அசம்பாவிதங்களை தவிர்க்கும் நோக்கில் 16 சுழியோடிகள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர் என கடற்படை பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மத்திய நிலையத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிண்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்- அநுராதபுரம் செல்லும் பெரும்பாலான பக்தர்கள் அங்குள்ள குளங்களில் குளிப்பது வழக்கம். இதன் போது சிலர் நீரில் மூழ்கி உயிரிழக்கின்றனர்.

# யாழ் - கிளிநொச்சி குடிநீர் திட்டத்தை

# ஒருங்கிணைந்து முன்னெடுக்க தீர்மானம்

## வடமாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கிளிநொச்சி குடி தண்ணீர் மற்றும் சுகாதார திட்டத்தினை ஒருங்கிணைந்த அடிப்படையில் முன்னெடுத்து செய்வதற்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான குழு ஆராய்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானங்களின் அடிப்படையிலே வடமாகாண முதலமைச்சர் அலுவலகம் இவ்வாறு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.கிளிநொச்சி குடிதண்ணீர் திட்டம் என்பது கிளிநொச்சி மக்களை எவ்விதத்திலும் பாதிக்காத அளவில் திட்டம் முன்னகர்த்தப்படும்.

164.04 மில்லியன் அமெரிக்கன் டொலர் நிதி வடக்கின் அபிவிருத்திக்காக கிடைத்த பாரிய நிதி வடக்கிற்கு குடிதண்ணீர் வழங்கும் அதே நேரம் இரணைமடு மேல்தளம் கீழ்தளம், அணைக்கட்டு, வாய்க்கால், துரிசு மற்றும் இதர பணிகள் முன்னெடுக்கப்படும்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும், தேசிய நீர்வழங்கள் அமைச்சிலும் இத்திட்டத்தை 2016 இற்குள் முடிவுறுத்தி அபிவித்தி செய்வதுடன் எதிர்காலத்தில் நைதரேற்று இல்லாத பாதுகாப்பான குடிதண்ணீரை வழங்க வேண்டும் என்பது பொதுவான நியதியின் அடிப்படையிலும், குடாநாட்டு நீர்வளம் முற்றாக நஞ்சாக மாறியுள்ள நிலையில் வடமாகாண சபை இந்த முடிவுக்கு வந்துள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை அரச தேசிய கொள்கை மகிந்த சிந்தனை கோட்பாடுகளுக்கு அமைய குடிதண்ணீர் பிரச்சினை வடக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை என்ற அடிப்படையில் பொதுத் திட்டத்தின் கீழ் இததிட்டம் விரைவில் தொடர்ந்து முன்னகர்த்த வடமாகாண சபை தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (92)

## சிறுநீரக நோயாளிக்கு உதவித்தொகை வழங்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் மேலுமொரு சிறுநீரக நோயாளிக்கு மாதாந்த உதவித்தொகை வழங்குவதற்குரிய நிதியை வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் அனுப்பி வைத்துள்ளது.

மாதம் 500 ரூபா நிதி பெறக் கூடிய வகையில் இந்த நிதி அனுமதி கிடைத்துள்ளது. கரைச்சி பிரதேச செயலர் கோபால பிள்ளை நாகேஸ்வரன் உரிய பயனாளிக்கு நிதியை கிடைக்க சமூக சேவைகள் அலுவலர் மூலமாக நடவடிக்கை எடுத்துள்ளார்.

இத்துடன் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 13 பேர் இந்த உதவித் தொகையைப் பெற்று வருகின்றனர்.

நோய் உதவிப் பணத்தை பெற விரும்பும் ஒருவர் அரசாங்க மருத்துவமனையில் பரிசோதித்து அறிக்கையைப் பெற்று கிராம சேவகரின் சிபாரிசு பெற்ற கோரிக்கை கடிதத்துடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவை நாடி விண்ணப்பிக்க முடியும். (90)

## முரசின் இன்றைய பலன்

(06.06.2014 வெள்ளிக்கிழமை)



ஜய வருஷம் சித்திரை மாதம் 23 ஆம் திகதி.
அட்டமி / சித்தம்.
பூர நட்சத்திரம் மு.ப. 11.19 வரை. பின் உத்தரம்.
இராகு காலம் 10.22 - 11.52 வரை. சுபநேரம் 05.52 - 07.22 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வீண்பேச்சுக்களில் விவாதங்களில் பங்கெடுக்காமல் செயலில கவமெடுத்தல், முன பின் அறியாத இடத்திற்கு துணையின்றிச் செல்வதினால அபாய கட்டம் நேரிடும். |
| ரிஷபம் | முற்றாகும் நிலைக்கு வந்த விவாகம் கோள் குண்டலம சொன்னவரினால் அற்றுப்போதல், பாவனைக்குதவாத பொருட்களைப் பெற்றதால் கவலை மேலிடல். |
| மிதுனம் | ஈடுபட்ட விடயத்தில் வெற்றிவாகை சூட கண்ணுங் கருத்துமாக செயற்படுதல், பேராசை பெருநட்டத்தைக் கொண்டு வருவதினால் தொழிலில் எச்சரிக்கையாக இருங்கள். |
| கடகம் | தொடரும் துன்பநிகழ்வுகளுக்கு காரணம் பொருத்தமில்லாத மனை என எண்ணி விசனப்படல், மனைவியின புத்திமதியால் பிரச்சினை எட்டும். |
| சிம்மம் | காணி உறுதியில்நம்பகத்தன்மை ஏற்பட்டதால்விலைக்கு வாங்கும் முடிவினைக்கைவிடல், வெளியூர் பயண நாட்டத்தைக் கைவிட்டு உள்ளூரில் தொழில் ஆரம்பிக்க விரும்புதல். |
| கன்னி | நாய்க்குத் தடுப்பூசி ஏற்ற அலட்சியமாக இருந்ததால் தண்டனைக்குள்ளாதல், மஞ்சள் கோட்டிலும் விபத்து நேரிடும் அபாயம் பற்றி விழிப்பாக இருங்கள். |
| துலாம் | ஆவணங்கள் இல்லாமல் வாகனம் செலுத்தியதால் தண்டம் பெறல், மருத்துவர்களினாலும் அறிய முடியாத நோயினால் பீடிக்கப்படல். |
| விருச்சிகம் | குடும்பத்தின் நலனை முன்னிட்டு அனுமதி கிடைத்தும் வெளியூர்பயணத்தைக் கைவிடல், பேச்சுப்பல்லாக்கு தம்பி கால நடையாக இருப்பவரைப்பற்றி எச்சரிக்கையாக செயற்படுங்கள். |
| தனுசு | வேண்டப்பட்டவருக்கு சலுகை காட்டியதால் ரகளை உருவாதல், உணவு விஷ நிலை அடைந்ததினால் தேகநலம் பாதிக்கப்பட்டு அவதியுறல். |
| மகரம் | காதலைப் புறந்தள்ளிவிட்டு பெற்றோர் நிச்சயித்த பெண்ணை மணம்புரிய மறுத்தல், அவசரபுத்தியினால்செயற்பாட்டினை மேற்கொண்டதால் பாரதூரமான விளைவு ஏற்படல். |
| கும்பம் | நட்புப்பாராட்ட வந்த நபரின் சுயரூபம் தெரிந்ததால் உறவைக் கைவிட்டு விடல், செய்யாத செயலுக்கு அபாண்ட பழி சுமத்தியதைக் கண்டு துயரடைதல். |
| மீனம் | அடிக்கடி வியாபார நிலையத்தில் கள்வர் கன்னம் வைப்பதினால் கவலை மேலோங்கும், நிறம், உடல் வாகு, சீதனத்தினால் விவாகம் முற்றுப் பெறாது ஸ்தம்பித்தல். |

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் B.Sc.பட்டமாணி திட்டம் 2014/2015 இற்கு அனுமதிக்கான இறுதித் திகதி 17.06.2014 ஆகும்.

விஞ்ஞானத்தில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி அல்லது அதற்கு சமமான தகைமைகள் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப்படிவங்களை 350 ரூபா செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3374 என்ற தொலைபேசியுடன் யாழ்ப்பாண நிலையத்தில் (கொக்குவில்) தொடர்பு கொள்ளலாம். (105)

## வீட்டின் வெளிப்புற மின்குமிழ்கள் திருட்டு

(கைதடி)

கைதடி வடக்கில் வசிக்கும் அரச உத்தியோகத்தர்கள் வீட்டில் கடந்த திங்கட்கிழமை வீட்டின் வெளிப்புறமுள்ள சக்தி வலு மின்சார மின்குமிழ்கள் 8 திருடப்பட்டுள்ளன.

கணவன் மனைவி இருவரும் நிறுவனம் ஒன்றில் பகல் வேலைக்குச் சென்று மாலையில் வீடு திரும்பினர். இரவாகியதும் வெளிப்புற மின்குமிழ்களை போட்ட போது அவற்றை காணாது அதிர்ச்சி அடைந்தனர்.

இவர்கள் வீட்டில் 4 மாதங்களுக்கு முன்பாக நீரிறைக்கும் இயந்திரம் காணாமற் போனது குறிப்பிடத்தக்கது. (90)

# குருப்பெயர்ச்சி பலாபலன்கள்

மேடம் (13.06.2014 முதல் 04.07.2015 வரை)

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம்)

**மன உறுதியுடன் உழைத்திடும் மேடராசிக் காரர்களே!**

குரு பகவான் உங்கள் ராசிக்கு 3 ஆம் இடத்தில் இருந்தால் அது அவ்வளவு சிறப்பான நிலை அல்ல. உங்கள் முயற்சியில் அவ்வப்போது தடை ஏற்பட்டு இருக்கும். இந்த நிலையில் குரு பகவான் 3 ஆம் இடத்திலிருந்து 4 ஆம் இடத்துக்குச் செல்கிறார். இதுவும் சிறப்பான நிலை என்று சொல்ல முடியாது. குருபகவான் 4 இல் இருக்கும்போது மன உளைச்சலையும், உறவினர் வகை யில் வீண் பகையையும் உருவாக்குவார் என்பது ஜோதிட வாக்கு.

சோதனைகளை கொடுத்தாலும் அது உங்களுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் செய்வார் என்பதை மறப்பது கூடாது. மாணவனுக்கு ஆசிரியர் வழிகாட்டியாக இருப்பது போல குரு உங்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருப்பார். விடாமுயற்சியுடன் செயல்பட்டால் இப்போதைய நிலையை விட மேலும் வாழ்வில் முன்னேற்றம் காண குருவின் பார்வை பலம் உங்களுக்கு துணை செய்யும்.

கோச்சார பலனை பார்க்கும் போது மற்ற கிரகங்களின் நிலையையும் கருத்தில் கொள்ள வேண்டும். பொதுவாக எதையும் சற்று முயற்சி எடுக்க வேண்டியதிருக்கும். பணப்புழக்கம் இருக்கும். அதே நேரம் செலவும் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நீடிக்கும். தேவை அனைத்தும் கிடைக்கும். வீடு, மனைவாங்க யோகம் கூடி வரும். கணவன்.மனைவி இடையே இருந்து வந்த பிரச்சினை குறையும். குடும்பத்தில் தேவையான வசதிகள் இருக்கும். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் தடைபட வாய்ப்புண்டு. அதுவும் கூட உங்களின் நல்லதுக்கு தான். புதிய வீடு வாகனம் வாங்க கடின முயற்சி தேவைப்படும்.

உறவினர்கள் வகையில் அடிக்கடி பிரச்சினை உருவாகலாம். ஓகஸ்ட் மாதம் சுக்கிரனின் பலத்தால் உறவினர்களிடம் சுமூக நிலை ஏற்படும். புதிய உறவினர்களால் உதவி கிடைக்கும். செப்ரெம்பர் மாதத்தில் குடும்பகுழப்பம் அனைத்தும் படிப்படியாக நீங்கும். புதனால் எடுத்த காரியம் வெற்றி அடையும். சுப நிகழ்ச்சி நடக்கும். சுக்கிரனால் பெரியோர்களின் ஆதரவும், ஆலோசனையும் கிடைக்கும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். பொருள் இலாபம் அதிகரிக்கும். டிசம்பருக்கு பிறகு மகிழ்ச்சியும், ஆனந்தமும் இருக்கும். பெண்கள் மிகவும் ஆதரவுடன் இருப்பர். சிலரது வீட்டில் பொருட்கள் களவு போக வாய்ப்புண்டு.

**பணியாளர்கள்:** உத்தியோகத்தில் தொடர்ந்து சீரான வளர்ச்சி நிலை இருக்கும். மேல் அதிகாரிகளிடம் அனுசரித்து போகவும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படலாம். அதிக முயற்சி செய்தால் சம்பள உயர்வு, பதவி உயர்வு போன்றவை கிடைக்கும். சக ஊழியர்கள் வகையில் உதவி கிடைக்காது. செப்ரெம்பர் மாதத்தில் புதனால் உத்தியோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு காண்பர்.

**பெண்கள்:** கணவரின் அன்பு கிடைக்கும். புத்தாடை, அணிகலன்கள் வாங்கலாம். பிள்ளைகளால் பெருமை கிடைக்கும். குடும்ப நன்மைக்காக எதையும் தியாகம் செய்வர்.

**கலைஞர்கள்:** புதிய ஒப்பந்தங்கள் அவ்வளவு எளிதாக பெற முடியாது. விடாமுயற்சியுடன் செயல்பட்டால் மட்டுமே முன்னேற்றத்திற்கு வழியுண்டு. எதிர் பார்த்த மதிப்பு, பாராட்டு போன்றவை கிடைக்காமல் போகலாம். ஓகஸ்டில் சுக்கிரனின் பலத்தால் தடைகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள்.

**மாணவர்கள்:** உழைப்புக்கு தகுந்த மதிப்பெண் கிடைக்கப் பெறுவர். ஆசிரியர்களின் அறிவுரை பயன் கொடுக்கும்.

**குரு அதிசார பலன்!**

குருபகவான் டிசம்பர் 3இல் அதிசாரம் பெற்று சிம்ம ராசிக்கு மாறுகிறார். 22 வரை அதில் இருப்பார். இந்த காலத்தில் குடும்பத்தில் குதூகலத்தை கொடுப்பார். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளை நடத்தி வைப்பார். பொருளாதார வளத்தை அதிகரிக்க செய்வார். பெண்களால் மேன்மை கிடைக்கும். புதுமணத் தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். மனதில் ஆன்மிக சிந்தனை மேலோங்கும்.

பரிகாரம்

சந்தர்ப்பம் கிடைக்கும்போது நவக்கிரகங்களை சுற்றி வாருங்கள். விநாயகர் வழிபாடு முன்னேற்றத்தைத் தரும். சிவன் கோவிலுக்குச் சென்று வாருங்கள். துர்க்கை வழிபாடு நடத்துங்கள். ஆதரவற்ற மூதாட்டிகளுக்கும், சன்னியாசிகளுக்கும் இயன்றளவு உதவி செய்யுங்கள். "வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்" என்ற தேவாரத்தை தினமும் பாடுங்கள்

# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்து

# மெதடிஸ், அராலி சரஸ்வதி, சண்டிலிப்பாய் இந்து சம்பியன்




பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை



அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்



மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை




அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்




தெல்லிப்பளை யூனியன் கல்லூரி



தெல்லிப்பளை யூனியன் கல்லூரி




சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி



சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி

(வவுனியா)

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் விளையாட்டுப் பிரிவு தற்போது வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் பெருவிளையாட்டுப்போட்டிகளை நடாத்தி வருகின்றது. இதில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான ஆட்டங்கள் நேற்று வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

15,17,19 ஆகிய வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட இப்போட்டியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அணிகள் மோதிக் கொண்டன.

15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை அணியும் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை அணி 11-10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், மன்னார் அடம்பன் வித்தியாலய அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி 18-6 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணியும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை அணியும் மோதின. அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணி வீராங்கனைகள் அதிரடிச் செயற்பட்டு வேகமாகப் புள்ளிகளைப் பெற்றுக் கொண்டனர். இதற்குப் பதிலடி கொடுக்க மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை அணி இறுதி வரை முயன்றபோதும் அது முடியவில்லை. இறுதியில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணி 24-13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியும் மன்னார் புனித ஜேசப் வித்தியாலய அணியும் மோதின. இதில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி 27-13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 28-20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் வட இந்து மகளிர் கல்லூரி அணியும் மன்னார் முருங்கன் மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் வடஇந்து மகளிர் கல்லூரி அணி 29-21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

வடக்கு மாகாண உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் ஓமந்தை மத்திய கல்லூரி அதிபர் திருஞானசம்பந்தமூர்த்தி, கோட்ட, வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (12,93)

# அரையிறுதியில் முன்னணிகள்



வெற்றிக் களிப்பில் நடால்

(பரிஸ்)

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடரின். அரையிறுதிக்கு முன்னணி வீரர்களான நடால், ஜோகோவிச் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் போட்டி பரிஸ் நகரில் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரும், 8 முறை சம்பியனுமான ரபேல் நாடல் (ஸ்பெயின்), சகநாட்டைச் சேர்ந்த 5ஆம் நிலை வீரர் டேவிட் பெரடரை எதிர்கொண்டார். சிறப்பாக ஆடிய நடால் 4-6, 6-4, 6-0, 6-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றுமொரு காலிறுதிப் போட்டியில் உலகின் இரண்டாம் நிலை வீரரான ஜோகோவிச் (சேர்பியா) 8ஆம் நிலை வீரரான ரோஸ்னிக்கை (கனடா) எதிர் கொண்டார். இதில் ஜோகோவிச் 7-5, 7-6, (7-5), 6-4 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று அரை இறுதிக்கு தகுதி பெற்றார்.

இதேவேளை, பிரித்தானியாவின் முர்ரேயும் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார். இதேவேளை, பெண்கள் ஒற்றையர் பிரிவில் ரஷ்யாவில் மரியா ஷரபோவா அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அழகிகளும் தயார்



பிரேசில் நாட்டில் உலக கால்பந்து போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டி களை பார்க்கவரும் வெளிநாட்டினரை கவருவதற்காக அங்குள்ள 10 இலட்சம் விபசார பெண்கள் தயார் நிலையில் உள்ளனர்.

அந்த நாட்டில் விபசாரம் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று ஆகும். சமீபத்தில் அரசின் வேலைவாய்ப்புத் துறை தனது இணையத்தளத்தில் எவ்வாறு விபசாரத் தொழிலில் ஈடுபடுவது என்ற குறிப்பையும் வெளியிட்டது.

பின்னர் பலரின் எதிர்ப்பு காரணமாக அந்தப்பகுதி நீக்கப்பட்டது. பிரேசில் நாட்டு விபசார அழகிகளில் பலர், இங்கிலாந்து நாட்டு வாலிபர்களை மயக்க இப்போதே ஆங்கிலம் கற்கத் தொடங்கி இருக்கிறார்கள்.



# கால்பந்து துளிகள்...

உலக கோப்பை கால்பந்து போட்டி ஆரம்பமாக இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில், கூகுள் இணையத்தளத்தில் இரசிகர்களால் அதிகம் பார்வையிடப்பட்ட வீரராக போர்த்துக்கல் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ முதலிடம் பிடித்துள்ளார். இவருக்கு அடுத்த இடங்களில் ஆர்ஜென்ரீனா வீரர் மெஸ்சி, பிரேசிலின் நெய்மார் ஆகியோர் பெற்றுள்ளனர். இங்கிலாந்து வீரர் ரூனி, ஸ்பெயினின் பெர்ணாண்டோ டோரஸ் ஆகியோர் நான்காம், ஐந்தாம் இடத்தில் உள்ளனர்.

---

2018 மற்றும் 2022ஆம் ஆண்டுக்கான உலக கோப்பை போட்டியை நடாத்துவதற்கான நாடுகளை தேர்வு செய்வதில் முறைகேடு நடந்துள்ளதாக எழுந்துள்ள புகார் குறித்த விசாரணை அறிக்கையை சர்வதேச கால்பந்து அதிகாரி மைக்கல் கார்சியா விரைவில் சமர்ப்பிக்கவுள்ளார்.

---

உலக கோப்பை கால்பந்துப் போட்டிக்கான கொலம்பிய அணியில், முழங்கால் மூட்டு காயத்தால் அவதிப்பட்டு வரும் நட்சத்திர வீரர் ராடமெல் பால்கோ இடம் பெறவில்லை.



# விலையுயர்ந்த வீரர்

பார்சிலோனா கிளப் அணிக்காக ஆடி வரும் ஆர்ஜென்ரீனாவின் முன்கள வீரர் மெஸ்சி, உலகின் விலையுயர்ந்த வீரராகத் திகழ்வதாக சமீபத்திய ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த சி.ஐ.இ.எஸ். கால்பந்து கண்காணிப்பு அமைப்பு சமீபத்தில் வெளியிட்ட ஆய்வில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நான்கு முறை உலகின் சிறந்த கால்பந்து வீரர் விருதை வென்ற மெஸ்சியின் சந்தை மதிப்பு 294 மில்லியன் டொலர். உலகின் சிறந்த வீரர் விருதை வென்ற ரியல் மட்ரிட் அணியின் ரொனால்டோவின் சந்தை மதிப்பு 114 மில்லியன் யூரோ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரொனால்டோ (வயது-29), மெஸ்சி (வயது-27) இருவருக்கும் இடையிலான சந்தை மதிப்பு வித்தியாசத்துக்கு அவர்களது வயது வித்தியாசமே காரணம் என ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# காயத்தால் ரொனால்டோ அவதி




உலக கோப்பை கால்பந்துப் போட்டிக்கு தயாராகி வரும் போர்த்துக்கல் அணிக்கு திடீர் பின்னடைவாக, அந்த அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் 29 வயதான கிறிஸ்டியானோ ரொனால்டோ காயத்தில் சிக்கியுள்ளார்.

கடந்த முறை உலகின் சிறந்த கால்பந்து வீரர் விருதை பெற்றவரான ரொனால்டோ, ரியல் மட்ரிக் கிளப்புக்காகவும் விளையாடி வருகிறார். அவர் இரண்டு விதமான சிறிய காயங்களால் பாதிக்கப்பட்டு இருப்பது தெரியவந்துள்ளது. தொடையிலும், இடது கால் மூட்டியிலும் அவர் வலியால் அவதிப்படுவதாக போர்த்துக்கல் கால்பந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இதனால் உலக கோப்பையில் ரொனால்டோ களம் காணுவாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இருப்பினும் அவரது உடல்தகுதி குறித்து கவலைப் படத் தேவையில்லை, உலக கோப்பை போட்டிக்குள் உடல்தகுதியை எட்டி விடுவார் என்று சக வீரர் நானி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உலக கோப்பை போட்டியில் போர்த்துக்கல் அணி தனது முதல் ஆட்டத்தில் வருகிற 16ஆம் திகிதி ஜேர்மனியை சந்திக்கிறது.



# சிறப்பு விமானம்

1978,1986 ஆகிய ஆண்டுகளில் உலக சம்பியன் வென்ற ஆர்ஜென்ரீன அணி 1990இல் 2ஆம் இடத்தைப் பிடித்தது. அதன் பின்னர் ஆர்ஜென்ரீன அணி காலிறுதிச்சுற்றைக் கூட தாண்ட முடியவில்லை. ஆனால், மெஸ்சி தலைமையிலான தற்போதைய அணி, வலுவாக உள்ளதால் அந்த அணிக்கு இம்முறை சம்பியனாக வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

இதற்காக சொந்த மண்ணில் கடும் பயிற்சி மேற்கொண்ட ஆர்ஜென்ரீன அணி, வரும் 9ஆம் திகதி பிரேசிலுக்குச் செல்லவுள்ளது. அணியினரைக் கௌரவிக்கும் வகையில், அந்நாட்டு அரசு வீரர்களுக்கென சிறப்பு விமானத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. விமானத்தின் வெளிப்புறத்தில் அணியின் சீருடை நிறத்தில் வர்ணமும், வீரர்களின் உருவப் படங்களும் வரையப்பட்டுள்ளன.




கால்பந்து திருவிழா இன்னும் 6 நாட்கள்



மெஸ்சி

# உலக கால்பந்தாட்ட விழா வெல்லப்போகும் அணி எது?

எஸ். அன்ரனிப்பிள்ளை கிளிபேட்
தலைவர்: யாழ். கால்பந்தாட்ட லீக்



## ஜேர்மனி சிறு பார்வை

1990இல் கிழக்கு, மேற்கு ஜேர்மனிகள் இணைந்த பின்னர், தற்போது 8 கோடி மக்களைக் கொண்டுள்ளது. கிழக்கு ஜேர்மனியானது 1974இல் மட்டும் உலக கிண்ணத்திற்குத் தகுதி பெற்று இரண்டாம் சுற்று வரை முன்னேறியது. மேற்கு ஜேர்மனியின் பதிவுகளே, பொதுவாக ஜேர்மனியாகக் கொள்ளப்படுகின்றன. பிரேசில் போன்று ஜேர்மனியும் 7 இறுதிப் போட்டிகளில் விளையாடியுள்ளது. ஆகக் கூடுதலான (4) தடவைகள் இரண்டாம் இடத்தையும் ஆகக் கூடுதலான (4) தடவைகள் மூன்றாம் இடத்தையும் பெற்றது. உலக கிண்ணப் போட்டிகளில் இதுவரை 206 கோல்கள் போட்டு பிரேசிலுக்கு (210 கோல்கள்) அடுத்ததாக, இரண்டாம் இடத்திலுள்ளது. FIFA இன் சர்வதேச தர வரிசைப்படுத்தலில், தற்போது 2ஆம் இடத்திலுள்ளது. 30 வயது மத்திய கள வீரர் பிலிப் லாம் ( Philipp Lahm) அணிக்குத் தலைமை தாங்குகிறார். இது இவரது மூன்றாவது உலக கிண்ணப் போட்டியாகும். 2010 இல் அவுஸ்திரேலியாவுக்கெதிரான போட்டியில் அணிக்குத் தலைமை தாங்கியதன் மூலம், உலக கிண்ணப் போட்டியில் ஜேர்மனிக்குத் தலைமை வகித்த வயது குறைந்த வீரர் என்ற பெருமை இவருக்குண்டு .2002, 2006, 2010 உலக கிண்ண போட்டிகளில் மொத்தம் 14 கோல்கள் அடித்து, தற்போதைய வீரர்களில் முன்நிலை வகிக்கும் 35 வயது, முன் கள வீரர் மிரொஸ்லவ் குளொஸ் (MiroslavK-lose) மிக முக்கிய வீரராவார். தலையால் கோல் போடுவதில் புகழ் பெற்றவர். இது, இவர் விளையாடும் 4ஆவது உலக கிண்ணப் போட்டியாகும். 2010 உலக கிண்ணத்தில் பங்கு கொண்ட, மத்திய கள வீரர்களான 25 வயது மெசூற் ஒசில் (Mesut Ozil), 24 வயது ரோனி குறூஸ் (Toni Kroos) ஆகியோ ரும் அணிக்குப் பக்கபலமான வீரர்களாவார். முன்னைய காலங்களை விட, திறன்களையும் நுட்பங்களையும் கொண்ட வீரர்கள் பலர் தற்போது இந்த அணியில் உள்ளனர்.54 வயது ஜோகிம் லோ (Joachim Low) ,2006 உலக கிண்ணப் போட்டிகள் முடிந்ததிலிருந்து அணியின் பயிற்சியாளராகக் கடமையாற்றுகின்றார்.

# கனடா வரலாற்றில் மறைக்கப்பட்ட இனவழிப்பு குற்றங்கள்

அமெரிக்காவில் செவ்விந்தியர்கள் இனவழிப்பு செய்யப்பட்ட வரலாறு வெளியுலகில் தெரிந்த அளவிற்கு, கனடாவில் நடந்த பூர்வகுடி மக்களின் இனவழிப்பு பற்றி யாருக்கும் தெரியாது. நீண்ட காலமாக, கனடிய அரசு தனது கடந்த கால இனவெறிக்கொள்கையை, மூடி மறைத்து வந்தது.

கனடா ஒரு குடியேற்ற நாடு என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள், தாம் குடியேறுவதற்கு முன்னர், அந்த மண் மனிதர்கள் வாழாத வனாந்தரமாக இருந்ததாக நினைத்துக் கொள்கின்றனர். அங்கு ஒரு காலத்தில், பல கோடி மக்கள் வாழ்ந்து வந்தனர் என்பதையும், அவர்களில் பெரும்பான்மையானோர் இனவழிப்பு செய்யப்பட்டனர் என்பதையும், அறியாமல் இருக்கின்றனர்.


கனடாவின் பூர்வகுடி மக்கள் மூன்று வகையாக பிரிக்கப் பட்டுள்ளனர்:

1) First Nation : பல்வேறு செவ்விந்திய இனங்கள்.

2) Métis : கலப்பின வம்சாவழியினர்.

3) Inuït : முன்பு எஸ்கிமோக்கள் என்று அழைக்கப்பட்ட துருவப் பகுதி மக்கள்.

மேற்குறிப்பிட்ட பூர்வகுடி மக்களைப் பாது காப்பதற்காக தனியான பிரதேசங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. ஆனால், இன்றைய கனடிய அரசு, அவர்களை சமூகத்தில் இருந்து ஒதுக்கி, மெல்ல மெல்ல ஒழித்துக் கட்டிக் கொண்டிருக்கிறது.





வேலையற்றோர் எண்ணிக்கை பூர்வகுடியினர் மத்தியில் அதிகமாக காணப்படுகின்றது. அரச கொடுப்பனவுகளில் பெரும் பகுதி, மது பாவனைக்கு செலவாகின்றது. பருவ வயது இளைஞர்கள், பாடசாலைக்கு சென்று படிப்பவர்கள் குறைவு. ஏதாவது குற்றச் செயலில் ஈடுபட்டு ஜெயிலுக்குள் இருப்பவர்கள் அதிகம். இது ஒருவகை நுணுக்கமான இனப்படுகொலை.

கனடிய பூர்வகுடிகளின் இனவழிப்பு, 1844 ஆம் ஆண்டே ஆரம்பமாகி விட்டது. அன்றிருந்த கனடிய அரசு ஆணைக்குழு, சிறு குழந்தைகளை பெற்றோரிடம் இருந்து பிரித்து, விடுதிப் பாடசாலைகளில் தங்க வைக்கும் திட்டம் ஒன்றை உருவாக்கியது. நாடு முழுவதும் 139 விடுதிப் பாடசாலைகள் இயங்கத் தொடங்கின. பூர்வ குடிகளின் வாழிடங்களில் இருந்து, தொலைதூரத்தில் அமைந்திருந்த படியால், அவற்றை தடுப்பு முகாம்களாகவே கருத வேண்டும்.

சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் பூர்வகுடி குழந்தைகள், கதறக் கதற பெற்றோரிடம் இருந்து பிரித்தெடுத்து கொண்டு செல்லப்பட்டனர். அவர்களை தங்க வைத்த விடுதிப் பாடசாலைகளை, கத்தோலிக்க அல்லது புரட்டஸ்தாந்து திருச்சபைகள் நிர்வகித்து வந்தன. கிறிஸ்தவ மதப் பாதிரிகளும், கன்னியாஸ்திரிகளும் பாடசாலை ஆசிரியர்களாக இருந்தனர்.

விடுதிப் பாடசாலைகளுக்கு கொண்டு வரப்படும் குழந்தைகளை முதலில் குளிக்க வார்ப்பார்கள். அதற்குப் பிறகு பேன் தடுப்பு மருந்து போடுவார்கள். குழந்தைகளுக்கு புதிய ஆங்கில - கிறிஸ்தவ பெயர் சூட்டப்படும். அவர்கள் அங்கே ஆங்கிலம் மட்டுமே பேச வேண்டும். பூர்வகுடிகளின் தாய்மொழியை பேசிய பிள்ளைகள் தண்டிக்கப் பட்டார்கள். "தாழ்வான" பூர்வக்குடிப் பிறப்பு குறித்த குற்றவுணர்வு, அவர்கள் மனதில் புகுத்தப்பட்டது.




விடுதிப் பாடசாலைகளில் தங்கிப் படித்த பூர்வக்குடிப் பிள்ளைகளை, "குட்டிப் பிசாசுகள்" என்று ஏளனம் செய்தனர்.

பல குழந்தைகள், அங்கு நடந்த கொடுமை தாங்க முடியாமல், தப்பி ஓட முயன்றன. தப்பியோடும் முயற்சியில் ஆபத்திற்குள் சிக்கிக் கொண்டு பல குழந்தைகள் இறந்துள்ளன. பாலியல் அத்துமீறல்கள், சித்திரவதைகள் தாங்க முடியாமல் பலர் இறந்தனர். கணக்கில் சேர்க்கப்படாத, "வெளிப்படுத்த முடியாத" காரணங்களினால் இறந்து போன பிள்ளைகள், ஆயிரக் கணக்கில் இருக்கும். மொத்தமாக, திட்டமிட்ட வகையில் கொல்லப் பட்டவர்களையும் சேர்த்தால், எண்ணிக்கை ஐம்பதினாயிரத்தை தாண்டும்.


கடந்த நூற்றாண்டில், எண்பதுகளின் இறுதிக் காலத்திலும், இன ஒதுக்கல் கொள்கை கொண்ட விடுதிப் பாடசாலைகள் இயங்கி வந்துள்ளன என்பது ஒரு அதிர்ச்சியான செய்தி. கடைசிப் பாடசாலை 1996ஆம் ஆண்டு மூடப்பட்டது. அந்தக் காலகட்டத்தில், கனடிய அரசும், கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து திருச்சபைகளும் நடந்த தவறை உணர்ந்து, பகிரங்கமாக மன்னிப்புக் கோரின. ஆயினும், அவர்கள் நடைமுறைப் படுத்திய இனவழிப்புத் திட்டங்கள், இன்று வரையும் ஆறாத வடுக்களாக காணப்படுகின்றன.

அவர்களுக்கு "உயர்ந்த ஐரோப்பிய நாகரிகத்தை" கற்றுக் கொடுத்தாக, கனடிய அரசு நினைத்துக் கொண்டிருந்தது. ஆனால், அன்று பாதிக்கப்பட்ட பல பிள்ளை களின் மனதில், அது வெறுப்பைத் தான் விதைத்து விட்டிருந்தது.

– கலையரசன் . தா –

# "அவதிப் பொதுமை" (Hasty Generalization)

- இடைக்காடு இளையபண்டிதன்.




இங்கே - "அவதி" எனும் பதம் "எதனையும் ஆராய முற்படாத அவசரம்" என்பதாக அர்த்தப்படுகிறது.

"கண்ணால் காண்பதும் பொய்; காதால் கேட்பதும் பொய் - தீர விசாரித்தறிவதே மெய்!" என்ற முதுமொழி, வழக்கொழிந்து வருவது போலத் தெரிகிறது. சாட்சியங்களின் அடிப்படையில் வழங்கப்படும் சட்டபூர்வமான தீர்ப்புகள் கூட, சிலவேளைகளில் சர்ச்சைக்குள்ளாகின்றன.

பொதுவாழ்வில் ஒருவர் எவ்வளவுதான் நன்மைகளைச் சமூகத்திற்கு நயந்திருப்பினும், சந்தர்ப்பவசமாக நேரக்கூடிய ஒரு சிறு தவறு, "வெண்திரையின் கரும்புள்ளி"யாகத் தெட்டத் தெளிவுறத் தெரியும். குறித்த நபருக்கு ஏதேனும் விபரீத விளைவு விளையுமாயின், இந்தக் கரும்புள்ளியே அதற்குக் காரணியாக்கப் படுகிறது,

"சூழ்ந்திருந்த அவ்வினையே இது!" என்பது சுருக்கமான தீர்ப்பாகிவிடுகிறது.

தமது இறுதிக்காலத்தில் - ஓரளவு பொருளாதார பலத்துடனும், சமூக மதிப்புடனும் இயங்கிக் கொண்டிருக்கும் ஒருவருக்கு, அவரது ஒரே வாரிசினால் எதிர்பாராத பேரிழப்பு ஏற்படுகிறது என வைத்துக் கொள்ளலாம். வருவாயிலும் கூடுதலாகச் செலவினம் உயர்கையில், "சாண் ஏற முழம் சறுக்குகிறதே!..." எனச் சம்பந்தப்பட்டோர் அங்கலாய்ப்பர். இங்கோ மில்லி மீற்றர் ஏற, கிலோ மீற்றர் சறுக்குகிற அதலபாதாள வீழ்ச்சி! பெரும் புதிராக, இத்தேட்டங்கள் யாவும் போய்த் தொலைந்த இடம் இப்பிரபஞ்சத்தின் ஏதுமொரு "கருந்துளையோ?!" (Black hole) எனும்படியான ஆச்சரியமே எல்லோர் எண்ணங்களிலும் நிலவுகிறது. அவரது குடும்பம் தனிமைப்படுகிறது.

இப்போது - குறித்த குடும்பத்தலைவரின் ஏதோ கடந்த கால பாரிய தவறுதான் அவர்களின் நரக நுழைவுக்கு மூலகாரணி! என்ற "பிரேத பரிசோதனை" அறிக்கை பிரகடனமாகிறது. இவ்வகையான குதர்க்கக் கூற்றுகளை நியாயப் படுத்துவதற்கு "அவதிப்பொதுமை" ஏதுவாகிறது. உண்மையில், "பாதணிகளுக்குப் பொருந்துமாறு பாதங்களைச் செதுக்கும்" அபத்த காரியமே இங்கு நிகழ்ந்திருக்கிறது.


மெய் - பொய்களின் தாற்பரியங்களை வேறுபடுத்திப் புரிந்து கொள்ள முன்வராத சில குறுகிய மனதுடையோரின் இந்த "அவதிப் பொதுமைத்" தீர்ப்புகள் அசல்தீர்வுகள் அல்ல! அவர்களின் சுய அளவு கருவிகளினால் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கணிப்பீடுகளே இவை.

இந்நிலையானது, தனிநபர் அல்லது குடும்பமொன்றின் சுமுகமான சமூக உறவிற்கோ, சகஜமான இயல்பு வாழ்விற்கோ துணை வராது, மாறாக மன விரிசல்களை மேலும் விசாலிப்பதற்கும், அவலக்குழிகளை இன்னும் ஆழப்படுத்துவதற்குமே வகை செய்யும்.

பொதுவில் - இந்த "அவதிப்பொதுமை" ஆனது, குதர்க்க வாதங்களின் குவியல்; அபத்தங்களின் அரைவேக்காட்டு அவியல்; அவ்வளவே!

# ஒரு நீதிக்கதை

- பிரைமோ லெவி -



ஒரு விடுமுறை நாளில் வெளியே புறப்பட்ட தந்தை, விளையாடிக் கொண்டிருந்த தன் மகளைப் பார்த்து, "செல்லம், நான் சாயுங்காலம் திரும்பி வருவதற்குள் இந்தத் தோட்டத்தில் கண்டபடி வளர்ந்து கிடக்கிற இந்தப் புல்லை எல்லாம் ஒழுங்கா நறுக்கி வைத்தாயானால் அப்பா வந்தவுடன் உனக்கு நூறு ரூபா தருவேன்.." எனச் சொல்லி அகன்றார்.

"ஓ.கே" என உற்சாகமாகச் சொல்லி ஓடிய குழந்தை புல் வெட்டும் கத்தரியை எடுத்துக் கொண்டு வந்து வேலையைத் தொடங்கியது.

மாலையில் அப்பா வீடு திரும்பிய போது வியந்து போனார். தோட்டத்தை அத்தனை அழகாகத் திருத்தி இருந்தது குழந்தை. ஆனால், அதென்ன ஒரு இடத்தில் மட்டும் புதராக உள்ளதே. நடுவில் அசிங்கமான ஒரு திட்டு....

அதையும் சரி செய்தால்தான் உனக்கு நூறு ரூபா என்றார் அப்பா. "அப்படியானால் வேண்டாம்..." என ஓடினாள் குழந்தை.

வியந்த அப்பா, நெருங்கிச் சென்று திருத்தப்படாமல் இருந்த அந்தப் புதரை விலக்கி உள்ளே பார்த்தார். அங்கே ஒரு தவளை குஞ்சுகளைப் பொரித்திருந்தது.

நீதி : "எங்கே ஒழுங்கின்மை இருக்கிறதோ அங்கே அன்பிருக்கும்"

# நானும் உந்தன் உறவை...

கடுமையான விபத்தில் ஒருவர் சிக்கியிருந்தாலோ அல்லது கடுமையாக தாக்கப்பட்டிருந்தாலோ, சில சிக்கலான தருணங்களைத் தவிர, அவரின் உயிர் பிரிய சில நிமிடங்களாவது ஆகும். மருத்துவத்தில் இதை Golden Hour என்கிறார்கள். இந்த நேரத்திற்குள் முறையான முதலுதவி அல்லது மருத்துவ உதவி தரப்பட்டால் பாதிக்கப்பட்டவர் உயிர் பிழைக்க அதிக சதவீத வாய்ப்புண்டு.

பொதுவாகவே குடிமையுணர்வில் பின்தங்கியுள்ள நாம் இது போன்ற நிகழ்வுகளை கலாசார ரீதியாக சரியான வழியில் எதிர்கொள்வதற்கு பழக்கப்படுத்தப்படவேயில்லை. வீதியில் எந்தவொரு கடுமையான விபத்தை சந்தித்தாலும் அதில் வழியும் குருதியை ரசிக்கும் உள்ளார்ந்த ரகசிய ஆர்வத்துடன் பார்த்து விட்டு "சே.. பாவம்ப்பா.." என்று முனகி விட்டு "வேறு எந்த புண்ணியவானாவது ஏதாவது செய்வார்கள்" என்கிற தப்பித்தல் மனோபாவத்துடன் அங்கிருந்து நகர்ந்து சில மணி நேரங்களுக்குள் அதை மறந்தே விடுவோம்.

இது போன்ற தாமதித்தல் அல்லது தப்பித்தல் மனோபாவம் அல்லது நம்முடைய மரபணுக்களில் எவ்வாறு நுழைந்திருக்கின்றன என்பதை ஆராய்ந்திருக்கிறார்கள். இந்த ஆய்வு முடிகளின் ஒரு பகுதியாக தமிழ் சினிமாக்களும் இதற்கு காரணமாக இருந்திருக்கக்கூடும் என்று அந்த ஆராய்ச்சியின் சில பகுதிகள் தெரிவிக்கின்றன. சினிமாவின் செல்வாக்கு வலிமையான தாக்கத்தைக் கொண்டிருக்கும் சமூகமாக நாமிருப்பதால் இந்த ஆராய்ச்சி முடிவுகளை மறுக்க முடியாது.

நம் பழைய தமிழ் சினிமாக்களில் இது போன்ற பல காட்சிகளைப் பார்த்திருக்கலாம். படம் முழுக்கவும் எதிர்மறையான செயல்களைச் செய்யும் தீயநாயகன்/வில்லன்/பிரதான பாத்திரம் ஏதாவது ஒன்றிற்கு கவித்துவ நீதியை வழங்குவதற்காக இறுதிக்காட்சியில் இயக்குநர் அவனை சாகடிக்க முடிவு செய்து விடுவார். கத்திக்குத்து, துப்பாக்கி சூடு, விபத்து இப்படி ஏதாவதொன்றில் சிக்கி மரணத்தோடு போராடுவது போன்ற காட்சி வரும்.

இதில் இன்னொரு பரிமாணம் என்னவெனில் நாயகனோ அல்லது நாயக குணம் கொண்ட ஒரு பாத்திரமோ வில்லனை அல்லது அவர்களது ஆட்களை தாக்கும் போது அவர்கள் கொசு போல விநாடிப் பொழுதில் சட்டென்று இறந்து கீழே விழுவார்கள்.

ஆனால் நாயகர்களுக்கு என்று சிறப்பான விதிவிலக்கு உண்டு. அவர்கள் சில நிமிடங்களாவது வசனம் பேசி அழுது புலம்பி திருந்தி பிறகுதான் இறப்பார்கள். பத்து நிமிட ஆலாபனையோடு இருபது நிமிடப் பாடல் ஒன்றை பாடி முடித்த பிறகு இறந்து போகும் அதிசய பிறவிகளும் உண்டு. (டி.ஆரின் - நானும் உந்தன் உறவை). கத்திக்குத்தில் மூச்சு திணறி வசனம் பேசும் பாத்திரத்திடம் சுற்றியுள்ள பாத்திரம் ஏதாவதொன்று நிச்சயம் இந்த வசனத்தைச் சொல்லும்.. "அய்யோ.. இப்ப அதெல்லாம் பேசாதீங்க. வாங்க.. ஆஸ்பத்திரிக்கு போகலாம்"

ஆனால் அந்த வசனம் சும்மா ஒரு ஒப்புக்கு, போலி கரிசனத்திற்காக சொல்வது போலவே இருக்கும். அப்படி அடிபட்டவரை தூக்கிச் சென்று காப்பாற்றிய காட்சிகள் எதுவும் தமிழ் சினிமாவில் பெரிதும் வந்ததே கிடையாது. ஏனெனில் அந்த வசனத்தை சொல்லி விட்டு மறுபடியும் இறந்து கொண்டிருப்பவரிடம் வசனங்களை அழுகையுடன் கேட்டுக் கொண்டிருக்கும் பிரகஸ்பதி பாத்திரங்களே அதிகம். அப்படியே "ஆஸ்பத்திரி செல்லும் வசனத்தை" ஏதாவது ஒரு பாத்திரம் அழுத்தமாகச் சொன்னாலும் இறந்து கொண்டிருப்பவர் சுய மருத்துவராக மாறி இப்படியாக சொல்வார்: "ஆஸ்பத்திரிக்கு போறதிலே பிரயோசனமில்ல. இன்னும் கொஞ்ச நேரத்துல செத்துடுவேன்". படம் பார்க்கிறவர்களும்.. அப்பாடா படம் முடியப்போகுதுடா சாமி.." என்கிற ஆசுவாச மனநிலைக்கு வந்து விடுவார்கள்.

இப்படியான காட்சிகளைப் பார்க்கும்




போதெல்லாம் மிகுந்த பதட்டமாகி விடும் என் நண்பன், "அடச் சனியன்களே... அவனை ஆசுபத்திரிக்கு தூக்கிக்கொண்டு ஓடாமல் இருந்து வசனம் பேசிக்கொண்டிருக்கிறானே... என்ன மடையர்களடா..." என்று தொணதொணக்க ஆரம்பித்து விடுவான். "டைரக்டர் அப்படித்தான் பேச சொல்லியிருக்காராம் பொறுடா." என்று சொல்லிய பிறகுதான் சற்று அடங்குவான்.

சமகால சினிமாக்கள் உட்பட இவ்வாறாக இந்த Golden Hour பற்றி தீவிரமாக போதிக்கும் தமிழ் சினிமா காட்சிகள் எதுவுமே இல்லாதிருப்பது வருத்தமாகவும் கவலையாகவும் இருக்கிறது. வருங்கால இயக்குநர்களாவது இதை மனதில் கொண்டு சமூகப் பொறுப்போடு இயங்க வேண்டும்.

- சுரேஷ் கண்ணன் -

# புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து தனித் தமிழீழத்திற்கு முனைவோர்

## 5

- கமெலியா நாதானியேல் -

2009இல் இராணுவம் படிப்படியாக முன்னேறத் தொடங்கியதும், எல்.ரீ.ரீ.ஈ மோசமான நடவடிக்கைகளில் இறங்கத் தொடங்கியது. அவ்வாறான ஒரு நடவடிக்கையில், எல்.ரீ.ரீ.ஈயின் தற்கொலைத் தாக்குதலாளிகளான ஒரு கரும்புலி குழு, நாட்டின் தென் பகுதிக்கு அப்போது லெப்ரினன் கேணல் தரத்துக்கு பதவி உயர்வு பெற்றிருந்த விநாயகமூர்த்தி தலைமையில் அனுப்பப் பட்டது. எனினும் இந்த நடவடிக்கை வெற்றி பளிக்கவில்லை. இராணுவம் முன்னேறியபோது விநாயகம் வன்னிக்கு வெளியில் இருந்தார், அதனால் எல்.ரீ.ரீ.ஈ தோற்கடிக்கப்படுவதற்கு முன்னரே அவரால் இந்தியாவுக்கு தப்பிச்செல்ல இயலுமானதாக இருந்தது. அதன்பின் விநாயகம் ஒரு போலிக் கடவுச்சீட்டில் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள உறவினர்களின் உதவியினால் ஒக்ரோபர் - நவம்பர் 2009இல் அவர் லண்டனுக்குப் பறந்தார். ஒரு குறுகிய காலம் ஐக்கிய இராச்சியத்தில் தங்கியிருந்த பிறகு, பரிஸுக்குச் சென்று அரசியல் தஞ்சம் கோரினார். விநாயகம் ஐரோப்பாவில், எல்.ரீ.ரீ.ஈயின் புலனாய்வுச் செயற்பாட்டாளர்களின் நெருக்கமாக பிணைந்த பிரிவு ஒன்றைத் தன்னுடன் வரவழைத்துக் கொண்டு அதன் ஏகத் தலைவராக இருந்து வருகிறார். விநாயகம் எல்.ரீ.ரீ.ஈயின் வெளியக உளவுத்துறையின் அநேக செயற்பாட்டாளர்களை தனிப்பட்ட முறையில் நன்கு அறிவார், அதனால் அவரது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதில் கஷ்டம் எதுவும் இல்லை.


இலங்கை அதிகாரிகள் சேகரப்பிள்ளை விநாயகமூர்த்தி என்கிற விநாயகத்தைக் கைது செய்வதற்காக 24 நவம்பர் 2010இல் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஒரு பிடியாணையை பெற்றுள்ளார்கள். விநாயகம் செயல்படும் பகுதிகள் தேசிய எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதிகள் என்பதால், இலங்கை அதிகாரிகள் சர்வதேச குற்றவியல் காவல்துறை அமைப்பின் (இன்டர்போல்) சேவையை பெற்று அவரது பயங்கரவாத குற்றம் சம்பந்தமாக ஒரு சிவப்பு எச்சரிக்கையை வெளியிடச் செய்யலாம். விநாயகம் பற்றிய ஒரு விரிவான கோப்பு தொகுக்கப்பட்டு உலகெங்கிலுமுள்ள சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் விநாயகம் மற்றும் அவரது தலைமையில் வழிநடத்தப்பட்ட தலைமையகக் குழுவை சேர்ந்த சர்வதேச ரீதியில் செயல்படும் ஏனைய 15 எல்.ரீ.ரீ.ஈ சார்பு அமைப்புகளையும் ஐ.நா பாதுகாப்புச்சபை தீர்மானம் 1373யை (இது அமெரிக்காவில், 2001 செப்ரம்பர் 11இல் நியுயோர்க் இரட்டை கோபுர தாக்குதலைத் தொடர்ந்து 2001 செப்ரம்பர் 28இல் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்டது) பயன்படுத்தி 21 மார்ச் 2014இல் வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புகளாக பிரகடனப்படுத்தியுள்ளது.

ஏப்ரல் 2014இல் இலங்கை அதிகாரிகள் இன்டர்போலின் சிவப்பு எச்சரிக்கையை விநாயகத்தின் தலைமையக குழுவை சேர்ந்த மூன்று தலைவர்களான, விநாயகம், றெஜி மற்றும் அம்புரூஸ் உட்பட 40 எல்.ரீ.ரீ.ஈ செயல்பாட்டாளர்களுக்காகப் பெற்றுக் கொண்டுள்ளார்கள். விநாயகத்தின் தலைமையில் இயங்கும் இந்த தலைமையகக் குழு பரிசில் நெடியவன் குழுவை சேர்ந்த பரிதி அல்லது றீகன் என்கிற நடராஜா மதிதரனை 2012, நவம்பர் 13இல் கொலை செய்ததாக சந்தேகிக்கப்படுகிறார்.

தற்சமயம் வெளிநாட்டில் இயங்கிவரும் எல்.ரீ.ரீ.ஈ கட்டமைப்புகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர விநாயகமும் அவரது குழுவினரும் பெரும் பிரயத்தனம் செய்து வருகிறார்கள். 2009இல் விநாயகம் இலங்கையை விட்டு தப்பிச் சென்றதின் பின்னர் அவரது நடத்தையில் ஒரு சீரான அர்ப்பணிப்பு இருப்பதற்கான சான்றுகள் உள்ளன. அவரது தலைமையக குழுவினர் தொடர்ந்து இரகசியமாகச் செயற்பட்டு இலங்கையில் பயங்கரவாத தாக்குதல்களை மேற்கொள்வதற்கான சாத்தியங்கள் உள்ளன.

அதற்கு மேலதிகமாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்துடன் அவருக்குள்ள



கூட்டாண்மை ஜெனிவாவிலும் மற்றும் வேறு இடங்களிலும் மனித உரிமை மேடைகளில் ஊடுருவுவதற்கான வாய்ப்பை அவருக்கு ஏற்படுத்தலாம்.

விநாயகம், தான் தலைமையக குழுவை சேர்ந்தவர் என கூறிவருகிறார், அதன் கருத்து வெளிநாட்டில் ஆதரவு வலையமைப்பில் பணிபுரிபவர்கள் அல்ல மாறாக யுத்தக் களத்திலிருந்து வந்தவர்கள் என்பதேயாகும். அதுதான் உண்மையான எல்.ரீ.ரீ.ஈ. வெளிநாட்டிலிருந்து யுத்தத்துக்கு ஆதரவு வழங்கி அதை செயற்படுத்த உதவியவர்களை மதிப்பதாக விநாயகம் வெளியில் சித்தரித்தாலும்கூட, தான் வித்தியாசமானவர் என அவர் நம்புகிறார், ஏனெனில் அவர் எல்.ரீ.ரீ.ஈயில் அதன் முடிவு வரை சேவையாற்றியவர் என்றபடியால் தான் வித்தியாசமானவர் என அவர் எண்ணுகிறார்.

விநாயகம் ஒரு முன்னிலை யுத்தகள வீரராகப் பணியாற்றவில்லை, ஆனால் ஒரு புலனாய்வு செயற்பாட்டாளராக சாதுர்யமான பயங்கரவாத தாக்குதல்களை தென்பகுதியில் குறிப்பாக கொழும்பில் திட்டமிட்டு நடத்தியவர். விநாயகத்தின் சிறப்புத் தகுதி புலனாய்வுத் தகவல்களை ஒன்றுதிரட்டி தற்கொலை குண்டு வீச்சுகளையும், கொலைகளையும் மற்றும் தாக்குதல்களையும் நடத்துவதே. சந்தேகமில்லால் சர்வதேச ரீதியாக செயல்படும் ஏனைய எல்.ரீ.ரீ.ஈ தலைவர்களுடன் - அமெரிக்காவின் விஸ்வநாதன் உருத்திரகுமாரன், நோர்வேயில் உள்ள நெடியவன் என்கிற பேரின்பநாயகம் சிவபரன் ஐக்கிய இராச்சியத்தின் பிதா இமானுவேல் - ஒப்பிடும்போது பிரான்சில் வசிக்கும் விநாயகம் அபாயகரமானவர்.

அவர் இரண்டு உலகத் தலைவர்களான ராஜிவ் காந்தி மற்றும் ரணசிங்க பிரேமதாஸ ஆகியோரின் கொலைக்குப் பொறுப்பான எல்.ரீ.ரீ.ஈ உளவுத்துறையின் ஒரு நான்காம் தர வீரர். பொட்டு, கபிலம்மான், மாதவன் மாஸ்ரர், ஆகியோருக்கு பிறகு விநாயகம் தலைவராக உள்ளார், மற்றும் பொதுமக்களை கொன்று பொதுமக்களின் உட்கட்டமைப்புகளை அழித்த பல தாக்குதல்களை இயக்கியும் நடத்தியும் இருப்பதற்கு அவர் தனிப்பட்ட முறையில் பொறுப்பாகிறார். பயங்கரவாத உபகரணங்கள், உத்திகள், தொழில்நுட்பங்கள் பற்றிய அறிவு மட்டுமல்லாமல், ஒரு பயங்கரவாத பிரசாரத்தை மீண்டும் ஆரம்பிக்கும் உந்துதல் உடையவராகவும் உள்ளார்.

(தொடரும்)




# இயற்கை வளம் செழித்து மங்காப்புகழ்பெற்ற குப்பிளான் மண்

திருமூலரால் சிவபூமி என்றழைக்கப்பட்ட ஈழவளத் திருநாட்டின் வடமுனை எனக் கருதப்படுவது யாழ்ப்பாணக் குடாநாடாகும். இது ஒரு சிறப்பான தரைத்தோற்றங்களைக் கொண்ட புவியியற் பிரிவாகும். அண்ணளவாக 1262 சதுர மைல் பரப்பளவைக் கொண்டது. யாழ் குடாநாடு சிறப்பான நிர்வாக வசதி கருதி வலிகாமம், யாழ்ப்பாணம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் என ஐந்து பிரிவுகளாக நிர்வகிக்கப்படுகிறது. குடாநாட்டின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ளது வலிகாமம் பிரிவாகும். குடாநாட்டின் வளம் மிக்க செழிப்பான பகுதிகள் வலிகாமம் பகுதியிலேயே அமைந்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் வலிகாமம் வடக்குப் பிரதேச சபைப் பிரிவிலும் யாழ்ப்பாணத்திலிருந்து மேற்கே சுமார் 9 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமமே குப்பிளான். பழமையின் கம்பீரமும் புதுமையின் வனப்பும் இயற்கையின் ஒட்டுமொத்தப் பேரழகும் கொட்டிக் கிடக்குமிடம். வடக்கே குரும்பசிட்டியையும் கிழக்கே புன்னாலைக் கட்டுவனையும் தெற்கே ஊரெழுவையும் புன்னாலைக்கட்டுவனின் ஒரு பகுதியினையும் மேற்கே ஏழாலை ஆகிய கிராமங்களையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இதன் கிழக்கே பலாலி பெருவீதியும் மேற்கே காங்கேசன் துறைப் பெருவீதியும் அமைந்துள்ளன.

நீர்வளம், நிலவளம், கல்விவளம், தொழில் வளங்களோடு யாழ்ப்பாணத்துத் தொன்மை பேசும் பாரம்பரியம் மிக்க சகல வளங்களையும் மொத்தமாகத் தன்னகத்தே கொண்ட செழுமையான கிராமம். எமது முன்னோர்களின் காலத்தில் இக் கிராமத்தில் சஞ்சீவிக ளில் ஒன்றான குப்பிழாய் என்ற புல் வகையினம் அடர்த்தியாக வளர்ந்து காணப்பட்டமையால் குப்பிழாய் என்ற சொல் காலப்போக்கில் மருவி குப்பிளான் என்று வந்ததாக வரலாறு ஒன்று உள்ளது. ஒழுங்கமைக்கப்பட்ட சமூக நிறுவனங்களையும், விவசாய நிலங்களையும் கொண்ட இயற்கையோடு இயைந்த ஆரோக்கியமான வாழ்வையும், நேசமும் பாசமும் மிகுந்த உறவு களையும் களங்கமில்லாத மனிதர்களையும், கல்வியலாளர் களையும், சமயப்பெரியார்களையும், அறிவியலாளர்களையும், தன்னகத்தே கொண்ட அழகான ஊர் இவ்வூராகும்.



மகான் காசிவாசிசெந்திநாதையர் சிலை

இம் மக்களை ஒன்றிணைக்கும் சமூக நிறுவனங்களில் முதலாவதாக ஆலயங்கள் விளங்குகின்றன. இக் கிராம நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மட்டும் பத்துக்கும் மேற்பட்ட ஆலயங்கள் இருக்கின்றன. இவற்றுள் முக்கியமானவைகளாக கடற்கரை கற்பக விநாயகர் பெருங்கோவில், சொக்கவளவு சோதி விநாயகர் பெருங்கோவில், கன்னிமார் கௌரி அம்பாள் பெருங்கோவில் ஆகியவை விளங்குகின்றன. இக்கோயில்களில் இடைவிடாது ஒலிக்கும் மணியோசையில் காற்றே சங்கீதமயமாகி விடுகின்றது. இவ் ஆலயங்கள் தான் இச் சமூகத்தை அறநெறியின் பால் சமூகப் பற்றுள்ளவர்களாகவும், சமயப்பற்றுள்ளவர்களாகவும், தேசப்பற்றுள்ளவர்களாகவும் வழி நடாத்திச் செல்கின்றன. இவ் ஆலயங்களில் மகோற்சவப் பெருவிழாக்கள் வெகு விமரிசையாக நடைபெறும் போது உள்ளூரில் இருந்தும், வெளியூர்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் கூட எம்மவர்கள் இங்கு வந்து உற்சவங்களில் கலந்து கொண்டு தங்கள் குல தெய்வங் களை வழிபடுவார்கள். எம்மக்களின் ஒன்று பட்ட சமூக சங்கம மாக இத்திருவிழாக்கள் திகழ்கின்றன.

அடுத்து சமூக நிறுவனங்கள் என்று பார்க்கும் போது குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் விளங்குகின்றது. இதற்கென ஒரு நீண்ட தனி வரலாறும் கல்விப் பாரம்பரியமும் இருக்கின்றது. மிகச்சிறந்த ஆசிரியர்கள், தொழில் வல்லுனர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள் உருவாவதற்கான அடித்தளம் இங்கே தான் போடப்பட்டது. இன்றும் சிறப்பான கல்வியை எமது மாணவர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது.


அடுத்ததாக விக்னேஸ்வரா சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும் முக்கியமானவை. விக்னேஸ்வரா சனசமூக நிலையம் யுத்தத்தின் பின் மறுசீரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் இயங்குகின்றது. இங்கு யாழ். மாவட்டத்தின் முன்னணி பத்திரிகைகளும் பெரியவர்கள் மற்றும் மாணவர்களுக்கு பயனுள்ள நூல்களைத் தன்னகத்தே கொண்ட நூல்நிலையமும் இயங்கி வருகின்றது. வலிகாமம் பகுதியிலேயே சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கிய பெருமை விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்தையே சாரும். இதுவும் தற்போது சிறப்பாக செயற்பட்டு வருகின்றது. அடுத்து குறிஞ்சிக்குமரன் சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமுமாகும். இதுவும் இடப்பெயர்வுக்குப் பின் எமது இளைஞர்களின் கூட்டு முயற்சியினால் மீளச் சீரமைக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. அடுத்து சமாதி கோவிலடியிலுள்ள லெனின் சனசமூக நிலையம் இதுவும் வைரவநாதனின் பெருமுயற்சியினால் மிகச் சிறப்பாகவே செயற்பட்டு வந்தது. போர்ச் சூழலின் காரணமாக தற்போது அந்தப் பகுதிக்குச் செல்ல முடியாததால் இயங்குவதில்லை. அடுத்து கொலனிப் பகுதியிலுள்ள வளர்மதி சனசமூக நிலையம் இதுவும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றது.




சுவிஸ் வாழ் குப்பிளான் அன்பரினால் உதவி வழங்கல்



குப்பிளான் விக்கினேஸ்வரா முன்பள்ளியின் சீருடை வழங்கும் நிகழ்வு



கன்னிமார் கௌரி அம்பாள் ஆலயத்தின் உள்தோற்றம்



குப்பிளான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்






குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக வீரர்கள்..

# சர்வதேச குருதிக்கொடையாளர் தினம் இம்மாதம் இலங்கையில் நடைபெறும்

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சர்வதேச குருதித்தினம் இம்முறை இலங்கையில் இடம்பெறும் என வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சர்வதேச இரத்ததான தின நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி 11ஆவது குருதிக் கொடையாளர்தினம் உலக சுகாதார நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

உயிர் காக்கும் உன்னத கொடையான இரத்த தானம் மேற்கொள்வோ இள வயதைக் கொண்டவர்களாக இருப்பதை காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய பொருளாதார அமைச்சின் வடக்கின் வசந்தத்தின் ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலுடன் சுகாதாரத்துறைக்கு பெருமளவிலான அபிவிருத்திகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். இன்னும் பல அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளவுள்ளோம். இதன்படி குருதிக்கொடை தொடர்பில் அதன் வரலாறை நாம் அறிகின்றோம். அதுவும் அபிவிருத்தி காணப்படுவது சிறந்த ஒரு விடயமாக கருதுகின்றோம். அதன் அவசியத்தை அனைவரும் புரிந்து கொண்டு செயறபடவேண்டும் என்றார். (இ,25)

## மக்கள் சந்திப்பு

ஒட்டுசுட்டான் முத்தயன்கட்டு முத்துவிநாயகபுரம் பொது நோக்கு மண்டபத்தில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மக்கள் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.


ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர் இ. குருபரன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் இக்கிராமத்தில் உள்ள அபிவிருத்திகள் தொடர்பாகவும். குறைபாடுகள் தொடர்பாகவும் மக்களிடம் அமைச்சரினால் கேட்கப்பட்டு அதற்கான தீர்வுகளும் விரைவாக பெற்றுத்தருவதாக உறுதியழித்துள்ளார் .

இதற்கு பிரதம விருந்தினராக ஒட்டுசுட்டான் பொலிஸ் பொறுப்பதிகாரி .பாடசாலை அதிபர்கள் பொதுமக்கள் பலரும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(40)



வதிரி உல்லிய நெதால்லை கண்ணகை அம்மன் ஆலயத்தின் மணவாளக்கோல விழா அண்மையில் நடைபெற்றபோது.... (48)

## வெள்ளி நற்சிந்தனை...



### சிவமும் சிவபக்தியும் பெற உண்மையான அவாவிருத்தல் போதும்

பொது ஒழுக்கம் தனி மனிதன் வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும், சமுதாய வாழ்க்கையிலும் பலமாக வேரூன்றி வளர்ந்தாலல்லது. உலகதில் தீமையும் துன்பமுந்தான் பெருகும் இப்போது ஒழுக்கம நிலை பெற்று ஓங்குவதற்கு, "ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு" என்ற பட்டினத்தடிகளார் உபதேச உண்மையை நன்றாக உணர்ந்து, அவவுணர்ச்சியின் வழியே இயங்கி, வாழ்க்கையில் எல்லாத்துறைகளையும் புனிதப்படுத்திக் கொள்ள வேண்டும். தெய்வக் கொள்கை இல்லாவிழன் நல்லொழுக்கமும் சிவ கருணையும் நிலைபெறா என்பது சான்றோர்கள் அறிந்து அறிவித்துள்ள உண்மையாகும். எனவே, இதனை ஊன்றிக் கவனிக்க வாய்ப்பில்லாதிருந்த சகோதரர்களும், "தெய்வமென்பதோர் சித்த முண்டாவதற்கு" வேண்டும் நல்ல கல்வி, கேள்வி, சிந்தனை, சன்மார்க்கர் தொடர்பு இவைகளை வளர்த்துக் கொண்டால் விரைவில் பெருநன்மை எய்துவர். தட்சணாமூர்த்தியின சின்முத்திரை, மனிதப் பிறப்பின் குறிக்கோளை எவ்வளவு அற்புதமாகக் குறிக்கின்றது! சொல்லாமற் சொல்லுகின்றது!

பொதுவொழுக்கத்தோடு சைவ ஒழுக்கத்தை வளர்த்து வருவதற்குச் சைவர்கள் – இருபாலாரும் – சிவதீட்சை பெற்றுக் கொள்ளுதல் முதல் அவசியம். சுத்த உணவின் முக்கியத்தைக் நாமும், பிற நாடுகளிலும் பேரறிஞர்கள் காரணங்காட்டி விளக்கியுள்ளனர். பழக்கம் காரணமாகவோ பிறர் கட்டாயத்தினாலோ இக்குறைபாடுடையவர்கள், வாரத்தில் குறைந்தது இத்தனை நாட்கள் அசைவம் உண்பதில்லை விரத நாட்கள் முதலிய புனித நாட்களில் உண்பதில்லை என்று ஒருவரம்பை ஏற்படுத்திக் கொள்ளலாம் பின்பு நல்ல அறிவை மதிப்பிற்குரிய ஆசாரியரிடம் தத்தம் மரபின் முறைப்பழ தீட்சை பெற்றுக்கொண்டு, நாள்தோறும் பஞ்சாட்சர செபம் செய்யத் தொடங்க வேண்டும். பஞ்சாட்சர ஜெபத்தின் மேன்மைகளை வடமொழி வேதத்திலும், தமிழ் வேதங்களாகிய தேவார திருவாசகங்களிலும் சித்தாந்த நூல்களிலும் விரிவாகக் காணலாம் இந்த ஜெபங்களும் இவற்றையொட்டிப் பழகும் தியானங்களும் ஆன்ம சக்தியை வளர்க்கும் "நமச்சியவாயவே ஞானமும் கல்வியும், நமச்சியவாயவே நன்னெறி காட்டுமே" என்ற தமிழமறைத் திருவாக்கு ஆழ்ந்த பொருளை உடையது, "கொல்வாரேனும் குணம் பல நன்மைகள், இல்லாரேனும் இயம்புவராயழல், எல்லாத் தீங்கினும் நீக்குவர் என்பரால், நல்லார் நாமம் நமச் சியவாயவே" என்பது சம்பந்தர் திருவாக்கு, "சீலமில்லையே" என்று சிவபக்தி பண்ணவும் சிவதீட்சை பெறவும் தயங்க வேண்டியதில்லை, சிவமும் சிவபக்தியும் பெற உண்மையான அவாவிருத்தில் போதும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

## பதிவிறக்கப் பெட்டகம்

சிங்கள தேசியவாதக் கட்சியான "ஜாதிக ஹெல உறுமய" கட்சியின் தலைவர் சம்பிக்க ரணவக்க, அண்மையில் பாரிஸ் நகரில் ஆற்றிய உரையில் தெரிவித்த கருத்துகள் சிலவற்றை இங்கே தருகிறேன். சிங்கள இனவாதிகள் பேசுவதற்கும், தமிழ் இனவாதிகள் பேசுவதற்கும் இடையில் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா? தமது இனத்தின், மொழியின் பழம் பெருமை பேசுவதில், இருவரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்லர்.

"உலகில் முதலில் தோன்றிய மூத்தகுழ சிங்கள இனம் தான்..." என்றெல்லாம் பழம் பெருமை பேசுவதில் தமிழர்களுக்குச் சளைக்காத சம்பிக்க ரணவக்கவின் உரையில் இருந்து:

– "எமது மொழி மிகவும் பழமையானது. மூவாயிரம் வருடங்களுக்கும் அதிகமாக, இந்தியாவில் சமஸ்கிருதம் வருவதற்கு முன்பிருந்தே, எமது மொழி அழியாமல் இருந்து வருகின்றது."

– "இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி என்று எந்த தேசமும், தனக்கென்று பொதுவான மறை நூலைக் கொண்டிருக்கவில்லை. எமக்கும், இஸ்ரேலிய யூதர்களுக்கும் மட்டுமே அது உண்டு. உலகிலேயே தொன்மையான, எமது இனத்திற்கென்று பொதுவான நூல் அது."

– "எமது நாடு உலகிலேயே பழமையான நாடு. எமது ஸ்ரீபாத [சிவனொளிபாத] மலை, இமய மலையை விடப் பழமையானது."

**– கலையரசன்.தா**

தேசியம், மொழிவெறி ஆகியவையெல்லாம், மனிதன் தன்னைத்தானே அழித்துக்கொள்வதற்கு முன்னால், இறைவன் அவனுக்குப் பைத்தியம் பிடிக்கச் செய்திருப்பதன் அடையாளங்கள்.

**– இந்திரா பார்த்தசாரதி**

தேசியம் என்பது புதிய அடையாளமே தவிர, தொழில் அதே பழைய கொலைத்தொழில்தான்.

**– பிரேம் ரமேஷ்**

வேறு எந்தக் காரணத்தாலும் பிழைக்க முடியாதவர்களும்; ஒழுக்கமும், நாணயமும் அற்றவர்களும், மக்களை ஏமாற்றி வாழும் மோசக்காரர்களும் கடைசியாய்ப் போய் அடைக்கலம் புகுவதற்கு இன்று தேசிய வியாபாரத்தை விடச் சுலபமான வழி வேறு ஒன்றும் இல்லை.

**– 1935 'குடியரசு' தலையங்கத்தில் பெரியார்**

பொது அடையாளப்படுத்தல் என்பது, ஒரு இனத்தின் சில கூறுகளையே முழு அடையாளமாக அதன்மீது கவிழ்க்கும் பாசிசச் செயல்.

**– உம்பர்ட்டோ எக்கோ**

சரியான காரணங்களுக்காகக் கொல்லலாம் சரிதான் என்ற சமாதானத்தை நம் மனங்களுக்குள் கொண்டுவந்து வைத்தது எது? குழந்தைகளை, பெண்களை, முதியவர்களை, என்ன நடக்கிறதென்றே தெரியாத அப்பாவிகளை கொல்வதிலும் தவறில்லை என்பதற்கெல்லாம் சொல்லக் காரணங்கள் உண்டு. இந்த 'சரியான காரணங்களை' வழங்குவதற்கு மதம், மொழி, நிறம், சாதி, தேசப்பற்று எல்லாமே போட்டியிட்ட வண்ணமுள்ளன.

**– ழீன் ரெனோர்**

போதுமான அளவு காலமும், கருவியும் இருந்தால், எத்தனை அழகிய விளையாட்டு பொம்மையையும், எவ்வளவு உயர்ந்த சித்தாந்தத்தையும் மனிதன் கொலைக்கருவி ஆக்கி விடுவான்.

**– எச்.ஜி.வெல்ஸ்**

களப்பிரர் முதல் வடுவர், பறங்கி வெள்ளையன் வரை வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி மீது படையெடுத்து வந்தவர் எவருமே தோற்கடிக்கப்பட்ட வரலாறே இல்லையென்ற போது... பாடல் பெற்ற தமிழ்வீரம் உண்மையில் என்ன என்ற சின்னமங்கலம் பாண்டியனின் கேள்விக்கு நம் மரபில் பதிலே இல்லை.


**– ப.சிங்காரத்தின் 'புயலிலே ஒரு தோணி'**

சர்வதேச வெகுஜன மனசாட்சி! இது உங்களுடைய மற்றொரு கற்பனை. ரொடீஷியாவைப் பற்றிய சர்வதேச மனசாட்சி என்ன ஆயிற்று? காலனி ஆட்சிமுறை நீங்கிய பிறகு, சர்வாதிகார ஆட்சி நிலவுகின்றதே பல ஆபிரிக்க நாடுகளில்! இதைப் பற்றிய சர்வதேச மனசாட்சி என்ன ஆயிற்று? அயல்நாடுகள் உதவி செய்யுமென்று எதிர்பார்ப்பது ஓர் எளிய மனப்பான்மை. அப்படி அவை உதவி செய்ய முன்வந்தாலும் அது சுயநலத்தின் அடிப்படையில் செய்கின்ற உதவியாகத்தான் இருக்கும். இதை ஏன் நீங்கள் மறந்துவிட்டீர்கள்?

**– 'ஏசுவின் தோழர்கள்' நாவலில் இந்திரா பார்த்தசாரதி**

# அரசின் திட்டங்களை அமுலாக்கும் பணிகளை முன்னெடுக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்பு



மக்களது பொருளாதாரத்தையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் வகையிலும் அரசின் கொள்கைத் திட்டங்களை முன்னெடுக்கும் வகையிலும் அரச உத்தியோகத்தர்கள் தமது பணிகளை முன்னெடுக்க வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி சங்க பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வேலைத்திட்டங்கள் தொடர்பில் துறைசார்ந்த அரச உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை உணர்ந்து முன்னெடுக்க வேண்டும். மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பெருளாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு ஒவ்வொருவரும் சிறப்பாக மட்டுமல்லாது விரைவான பணிகளையும ஆற்ற வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் ஊடாகவே உத்தியோகத்தர்களது கடமைகள் முழுமையடைய முடியும்.

இவ்வாறான அரச உத்தியோகத்தர்களின் கண்ணியமான சேவைகளை உணர்ந்து தடுக்கும வகையிலோ நிறுத்தும் வகையிலோ முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை தாம் ஒருபோதும அனுமதிக்கப் போவதில்லையென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே பிரதேச செயலர் பிரிவுகளில் சமுர்த்தி உத்தியோகத்தர்களால் வாழ்வின் எழுச்சித் திட்டத்திற்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பில் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

இதேவேளை சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு வாரத்தினை முன்னிட்டு சமுர்த்தி உத்தியோகத்தர்களால் நிதிசேகரிக்கப்பட்டு வரும் நிலையில் நிதியானது கட்டாயப்படுத்தி பெற்றுக் கொள்ளப்படுதல் கூடாதென்று சுட்டிக்காட்டிய அமைச்சர் இதுவிடயம் தொடர்பாக மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் மகேஸ்வரனிடம் பணிப்புரை விடுத்திருந்தார்.

அத்துடன், வாழ்வின் எழுச்சி திட்டத்திற்கு அமைவாக சமுர்த்தியால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

சமுர்த்தி வேலைத்திட்டங்களை பொறுத்தவரையில் ஏனைய மாவட்டங்களை விடவும் யாழ்.மாவட்டம் முன்மாதிரியாக செயற்பட வேண்டுமென்றும் இது ஒன்றிணைந்த செயற்பாட்டின் மூலமே சாத்தியமாகுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது யாழ்.மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ரகுநாதன், அமைச்சரின் ஆலோசகர் சுந்தரம் டிவகலால, அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி குகேந்திரன், ஈ.பி.டி.பியின் வடமராட்சி இணைப்பாளர் சிறிரங்கேஸ்வரன் ஆகியோர் உடனிருந்தனர்.

# நயினாதீவு வருடாந்த உற்சவம் பக்தர்களின் தேவைகுறித்து ஆராய்வு

(நயினாதீவு)

வரலாற்றுச் சிறப்புப் பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள வருடாந்த உற்சவத்தையொட்டி நாட்டின் பல பாகங்களிலிருந்து வருகை தரவிருக்கின்ற அனைத்து மக்களினது வருகையினை கோருவதையும் அவர்களினது மிக அத்தியாவசியமான தேவைகள் குறித்து நயினாதீவு மேற்கு வீதியில் அமைந்துள்ள ஆலயக் காரியாலயத்தில் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சளாதேசி சதீஷன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆலயத் திருவிழாக் காலங்களில் நாட்டின் பலபாகங்களிலிருந்து வருகை தருகின்ற மக்களினது போக்குவரத்து, சுகாதாரம், குடி தண்ணீர் பாதுகாப்பு உள்ளிட்ட பல விடயங்கள் பற்றி ஆராயப்பட்டன. ஆலயத்திற்கு வருகின்ற மக்களினது போக்குவரத்துச் சேவையில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினது பிராந்திய முகாமையாளரான கே.கேதீசன் கலந்துகொண்டு மக்களினது போக்குவரத்திற்கான சேவைகளை தடையின்றி இரவு 7 மணிவரை குறிகாட்டு வான் இறங்குதுறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பஸ் சேவையினை நடாத்துவதென உறுதியளித்தனர்.

வேலணைப் பிரதேச சபையினது தவிசாளர் சி.சிவராசா கடந்த வருடங்களைப் போல இவ்வருடமும் குடிதண்ணீர் மற்றும் சேவைகளை வேலணைப பிரதேச சபை நிர்வாகம் நடாத்தும் என்று தெரிவித்துள்ளார்.

அதேபோன்று சுகாதாரப் பகுதியினரும் ஆலயச் சூழலில் அமைந்துள்ள மலசல கூடங் கள் கிணறுகள் என்பவனவற்றையும் உணவு விற்பனை நிலையங்களையும் சுகாதார முறைகளை பின்பற்றி வருவதற்கான அறிவுரைகளை வழங்கிவருவதுடன் கண்காணிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர். மோட்டார் படகின் உரிமையாளர்களும் ஆலயத்திற்கு வருகின்ற மக்களினது வழிபாடுகளுக்கு இடையூறின்றி மோட்டார் படகு சேவை களை இலகுபடுத்தி ஒற்றுமையாகச் செய்வதாகவும் தெரிவித் தனர்.

பொலிஸார் மக்கள் மத்தியில் தங்கள் கடமைகளை மேற்கொள்வார்கள் என தெரிவித்துள்ளனர்.

அதேபோன்று கடற்படையினரும இருதுறைமுகங்களுக்கிடையே சேவையாற்றி வருகின்ற மோட்டார் படகினது சேவைகளையும் போக்குவரத்துப் போன்ற சேவைகளையும் துறைமுகங்களிலும் கடற்பரப்பிலும் கண்காணிப்பதாக தெரிவித்துள்ளனர்.

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி அமைப்பு செஞ்சிலுவைச் சங்கத்தின் வேலணை பிரிவு, சாரணர் தொண்டர்கள் மக்கள் நலன்புரி சங்க படையினரும கடந்த வருடங்களைப் போல ஆலய சுற்றுப்புறங்கள் இறஙகு துறைகளிலும் தங்கள் தொண்டர் பணிகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர். இலங்கை மின்சார சபையினது வேலணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி அ.அருள்நாதன் தெரிவிக்கையில்,

ஆலயத்தின் சுற்றுப்புறங்களில் தற்பொழுது காணப்படும் அநேகமான மின் வயர்கள் பழுதான நிலையில் காணப்படுவதாகவும் இது திருத்தி அமைக்கப்படவேண்டும் என்றும் ஆலய வீதியினதும் மற்றும் சுற்றுப் புறங்களினதும் மின்சார வெளிச்சத்தை விரிவுபடுத்த வேண்டுமானால் ஆலயத்தின் செலவில் மின்குமிழ்களை குறைந்தளவில் வழங்க வேண்டும் என்றும் மிகுதியானதை தாங்கள் இணைந்து மேற்கொள்வதாகவும் ஆலய திருவிழாக்காலங்களில் மின்சார விநியோகத்தினை கண் காணிப்பதற்கென தற்காலிக அலுவலகமொன்றினை அமைப்பதற்கு இடம் தர வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்

ஆலயவீதிகள் சுற்றுப்புற வீதிகளில் வர்த்தகர்களுக்கான இடங்களை ஒதுக்கும் போது வேலணைப் பிரதேசசபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படவேண்டும் என்று வேலணை பிரதேசசபைத் தவிசாளர் சி.சிவராசா தெரிவித்ததுடன் அதற்கான ஒழுங்குகளையும் மேற்கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

ஆலய வீதிகளிலோ அன்றி சுற்றுப்புறங்களிலோ பச்சை குத்துதல் மதுபானங்கள் விற்பனை செய்தல் என்பவற்றுக்கு முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05,21)

# வாக்குமத்திய நிலையங்களில் 12,000 ஐ.தே.க. இணைப்பாளர்கள்

(கொழும்பு)

12ஆயிரம் வாக்கு மத்திய நிலையங்களை இலக்கு வைத்து, 12 ஆயிரம் இணைப்பாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஒன்று கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின மத்திய செயற்குழு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் தேர்தல்களில் ஆசன ரீதியாக கட்சியின் வாக்கு பலத்தை அதிகரித்துக் கொள்வதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# சுன்னத் கத்னாவின் போது பலியானது 3 மாதக் குழந்தை

சுன்னத் கத்னாவின்போது 3 மாதக் குழந்தையொன்று மரணமடைவதற்கு காரணமாக இருந்தார் என்று சந்தேகிக்கப்படும் வைத்தியரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புதுக்கடை இலக்கம்-4 நீதிமன்ற நீதவான் ஒகஸ்டா அத்தபத்து உத்தரவிட்டுள்ளார்.

இஸ்லாமிய முறைப்படி முஸ்லிம் ஆண்குழந்தைக்கு சுன்னத் கத்னாவின்போது 3 மாத குழந்தையொன்று உயிரிழந்த சம்பவம், வெல்லம்பிட்டி மீத்தொட்டுமுல்லை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெறறுள்ளது.

சம்பவத்தை அடுத்து, சிசுவின் மரணத்துக்கு காரணமானவர் என சந்தேகிக்கப்படும் மாளிகாவத்தையைச் சேர்ந்த 47 வயதுடைய வைத்தியரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மொஹமட் ஹம்தான் என்ற ஆண் குழந்தையே சம்பவத்தில் உயிரிழந்துள்ளது.



# பரமர் சங்கமம்

'எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான். பாடியவன் பாட்டைக்கெடுத்தான்' எண்டது மட்டுமே நடக்குதிங்கை. ஒரு பானை சோத்துக்கு ஒரு சோறுபதமென்பது போலத் தான் உந்தக் கதையும்

ஏண்டால் ஆகப்பாட்டும் ஏடுந்தான் பழுதானதெண்டில்லை. எல்லாமே பழுதுபட்டுப் போச்செண்டுதான் அர்த்தம் கொள்ள வேண்டிக் கிடக்கு.

பேராசிரியர்மார் அரசியலுக்கை பூந்து அரசியலைக் குளப்பிச்சினம். இப்ப வாழ்வியலுக்கேம் தலையை நுழைக்கினம். சும்மா கிடந்த சங்கையூதிக் கெடுத்தான் ஆண்டி எண்டது போல பேராசிரியர் சிவச்சந்திரன் யாழ்ப்பாணக் குடிநீரிலை குண்டைத்தூக்கிப் போட்டிட்டார்.

மலம் கலந்த நீரைத்தான் யாழ்ப்பாண மக்கள் குடிக்கினமெண்டால் முழுச்சனமும் சத்தியெல்லே எடுக்கப் போகுதுகள் வாந்தி வந்தால் பேதிவர நேரமே செல்லும்? ஆசுப் பத்திரியள் நிறைஞ்சு வளஞ்சுசனமும் செத்துத்துலையிற கதையே சொல்லுறது? நீரைப்பழிக்கக் கூடாதெண்டு முன்னோர் சொன்னதை மறந்தே போனியள்?

நீரைப் பழிச்சால் நீரிழிவு வராதே கேக்கிறன். கொஞ்ச நாளைக்கு முன்னம் விவசாய விரிவுரையாளர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் தண்ணீரே இல்லாமல் போயிடுமெண்டு கூறினா. இப்ப இவரிப்புடிச்சுச் சொல்லுறார். இப்ப கொஞ்சக் காலமா இதுதான் கதை இவ்வளவு காலமும் வாழ்ந்து போனதுகள் காத்தை மட்டுமே குடிச்சுச் சீவிச்சதுகள் இப்ப சனம் பெருகீட்டுது; மலம் கழிக்கிறதும் மலசல கூடங்களும் புழுதிட்டுது எண்டதாலேயே கதைவிடுறியள்?

இலங்கேல வேறேந்த இடத்திலும் இதைவிடக்கூடிய சனமும் மலசல குழிகளும் கிடையவே கிடையாதே! வீட்டுக்கை இருந்தவன் வீடுடைஞ்சு தன் மீது விழுமெண்டு பயந்து வெளியில் ஓடினானாம் வெளியில் நிண்டு வானத்தைப் பார்த்தானாம் வானமுடைந்து வீழ்ந்தால் எண்டு சிந்தித்தவன் நிலையெல்லே பேராசிரியர் சிவச்சந்திரன் சொல்லீட்டு இருக்கிறார்.


தமிழரின் ஒற்றுமையைப் பற்றி மேடைகளில் காது குளிரப்பேசக் கேட்டிருக்கிறம் கதையள் கட்டுரைகளிலே வாசிச்சும் இருக்கிறம் ஆனா நேரில அனுபவிச்சதில்லை கொழும்பு நகரை விடக் கூடிய சனமே இங்க வாழுது? அங்க மலசல கழிவுகளைச் சமுத்திரங்களுக்குக் கடத்திறது போலை கடத்திற வேலையைப் பாக்கலாமெல்லே! அதுவுமில்லாமல் கொழும்பு நகருக்குக் காசல் நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணி எடுத்தும் வரப்படுகுது.

இஞ்சை வன்னி இரணைமடுக் குளத்தில் இருந்து கொண்டுவர விடாமல்முட்டுக் கட்டை போடுதுகள் எங்கட தமிழ்ச் சனம் இதைப் பாத்துச் சிங்களவன் சிரியாச் சிரிக்கிறான். முதல்ல இவ்வளவு காலமும் இரணை மடுக் குளத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட தண்ணியிலேயே இச்சத்தேச் சனங்கள் வாழ்ந்தே இல்லாமலும் வாழுறேம்.?

பேராசிரியர் நகரெண்டு இல்லாமல் கிராமங்களிலும் வயல் தோட்டங்களுக்கு கிருமிநாசினி தெளித்து தண்ணி பழு துபட்டுப் போச்செண்ணுறார். அதுக்கு மழைநீரைத் தேக்க வேணுமாம். ஒஸ்ரேலியாவிலை எங்க மானிப்பாய் பொடியனே பொறியியலாளர் அங்கேருந்து ஆக்கள் கொண்டுவரத்தேவேல்லை நாங்களே செய்யலாமெண்ணுறார்.


பிறகேன் இந்த விசயத்தைக் கூக்குரலிட்டு சொல்லுவான் சனம் தண்ணி குடிக்குமே பாடியவன் பாட்டையும் எழுதியவன் ஏட்டேம் கெடுக்கிறேணெ்ணுறது இப்புடித் தான் இல்லையே பின்னை...

17.





(i) 20
(ii) 30
(3) 40

18.




(i) 7
(ii) 9
(iii) 11


19.





(i) 9
(ii) 10
(iii) 12

* சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதுக.


20.





21.




22.




23.




இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014


பகுதி - I
1 மணி 15 நிமி



# கல்வி முரசு

◆ பிழையான படத்தின் கீழ் கோடிடுக.


01.



A B C D

(i) A
(ii) B
(iii) D

02.




A B C D

(i) B
(ii) C
(iii) D


◆ கீழே தரப்பட்ட அமைப்பில் ஆரம்பத்தில் தரப்பட்ட அமைப்பை பெற தரப்பட்ட மூன்று உருவிலும் எதனை பார்க்கும்போது கிடைக்கும்

03.



(i) (ii) (iii)


04.



(i) (ii) (iii)


◆ ஆரம்பத்திலுள்ள படத்திற்கு பொருத்தமான படம் எது.

05.



(i) (i) (iii)


06.



(i) (ii) (iii)


* ஆரம்ப உருவுடன் ஒத்தஉருவின் கீழ் கோடிடுக.

07.



(i) (ii) (iii)


08.



(i) (ii) (iii)


* அடுத்து வரும் உரு எது எனக்கண்டு கோடிடுக.

09.



(i) (ii) (iii)

10.




(i) (ii) (iii)




வெற்றுக்கூட்டில் வரும் உருவைத் தெரிவு செய்து கீறிடுக.

11.




(i) (ii) (iii)

12.



(i) (ii) (iiii)


13.



(i) (i) (iii)


◆ புள்ளிகோட்டில் வரவேண்டிய விடையின் கீழ் கோடிடுக.

14.





(i) 32
(ii) 34
(iii) 36

15.




(i) 10
(ii) 12
(iii) 14


16.




(i) 10
(ii) 11
(iii) 12

# அரசியல் தீர்வுடனான அமைதியான வாழ்வு அடுத்த சந்ததியினருக்கு கிடைக்க வேண்டும்

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் தெரிவிப்பு



அடுத்த சந்ததிக்கு நாம் விட்டுச் செல்வது இன்றைய அரசியல் சூழ்நிலையாக இருக்கக் கூடாது. நிரந்தர அரசியல் தீர்வுடன் கூடிய அமைதியான வாழ்வாக இருக்கவேண்டும் என்பதே எமது அமைச்சரின் நோக்கமாகும் - என மீசாலை மேற்கு சமுர்த்தி உத்தியோகத்தர்களுடனான சந்திப்பின் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி. குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்தார்.

சமகால அபிவிருத்தி தொடர்பாக அப்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மாதர் சங்க அமைப்பினர் ஆகியோரின் ஏற்பாட்டில் மீசாலை மேற்கு கிராமிய அபிவிருத்தி மகளிர் சங்கமண்டபத்தில் அண்மையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. அங்கு அவர் மேலும் கூறுகையில்,

1990இல் ஆரம்பித்த மக்களுக்கான வாழ்வாதார அபிவிருத்தியை நாம் இன்றுவரையும் அயராது செய்துவருகின்றோம். இக்காலப்பகுதியில் உங்களது அபிவிருத்திக்காக எமது எத்தனையோ உறுப்பினர்களை நாம் இழந்துள்ளோம். இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாண மக்களை 1996இல் இருந்து இன்று வரை பாதுகாத்து அவர்களுக்குத் தேவையான அனைத்து அபிவிருத்திகளையும் செய்து வருவது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனாயகக் கட்சி என்ற ஒன்று தான்.

தேசியரீதியான ஓர் இணக்கம் வேண்டும் என்றால் அதை நாம் அரசுடன் பேசித்தான் பெற வேண்டும்.நமக்கு கிடைக்க வேண்டிய அத்தனை தீர்வுகளையும குழப்பிவரும் கூட்டம் இன்றுவரை ஏற்றுக்கொள்ளக் கூடிய ஏதாவது ஒரு திட்டத்தை உங்களுக்கு தந்துள்ளார்களா? இந்த நிலைக்கு இனிவரும் காலத்தில் ஒரு மாற்றத்தைத் காணவேண்டியது உங்கள் கடமையாகும் என்றார்.

இச்சந்திப்பின் போது உத்தியோகத்தர்கள் மாதர் சங்க அமைப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்த ஒருங்கிணைப்பாளர் விரைவில் அமைச்சரூடாக தீர்வு பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

இதில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிசாவகச்சேரி நகரசபைஉறுப்பினர் திருக்குமரன் , மாதர் சங்க அமைப்பினர் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# பக்திபூர்வமாக இடம்பெற்ற பொங்கல் உற்சவம்



மழைத்தூரலின் மத்தியில் பொலிகை அரசம்புல மாதா ஆச்சியின் பொங்கலும் வெளி மடை உற்சவமும் பக்திபூர்வமாக இடம்பெற்றது.


பொலிகண்டி மேற்கு அரசம்புல மாதாங்கோவில் வருடாந்த பொங்கல் விழா கடந்த திங்கட்கிழமை இரவு ஆரம்பமாகி மறுநாள் அதிகாலை வெளிமடை உற்சவத்துடன் பூர்த்தியாகியுள்ளது.

2 ஆம் திகதி இரவு 11 மணியளவில் வழமைபோல் பொலிகண்டி மேற்கு பிள்ளையார் கோவிலடியைச்சேர்ந்த ஆறுமுகநாதன் ஞானேஸ்வரன் என்பவரது வீட்டிலிருந்து பொங்கல் மடை மற்றும் அபிஷேகப்பொருட்கள் பறைவாத்திய முழக்கத்துடன் பவனியாக ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டு மாதா ஆச்சிக்கு விஷேட பூசை அபிஷேகங்கள் நடைபெற்றன.

தொடர்ந்து ஆலயக் கிணற்றிலிருந்து மேற்படி பரம்பரை உபயகாரர்களினால் வழந்தெடுத்து பொங்கல் வைபவம் ஆரம்பமாகியது. இந்நேரத்தில் மழை திடீரென பெய்து சில மணிநேரத்தில் ஓய்ந்த பின்னரே அடியார்கள் தம் பொங்கல் வைபவத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அதிகாலை 4 மணியளவில் விஷேட பூசை ஆராதனைகளுடன் வெளி மடை உற்சவம் இடம்பெற்றது. இதில் அடியார்கள் தம் பொங்கல் நைவேத்தியங்களுடன் பழவகைகளையும் பரவிப்படைத்தும் வழிபாடுகளை மேற்கொண்டனர். (116)

# சீரற்ற வாய்க்கால் புனரமைப்பு விசனமடையும் கிராம மக்கள்



கரணவாய் இராச கிராமத்தில் புனரமைப்பு செய்யப்பட்ட வாய்க்கால் சீரான முறையில் அமைகக்கப்படாமையால் மழை நீர் வழிந்தோட முடியாமல் தேங்கிக் காணப்படுவதாக இக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

புனரமைக்கப்படாதிருந்த இவ் வாய்க்கால் 21 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் பெய்த மழை நீர் வாய்க்கால் ஊடாக வழிந் தோட முடியாது தேங்கி காணப்ப டுவதாகவும் குறித்த வாய்க்கா லின் வயல் பகுதி ஓரம் சரியான முறையில் அமைக்கப்படவில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் வாய்க்காலினூடாக வயற்பகுதிக்கு தண்ணீர் வருவது தடைப்படுவதாகத் தெரிவிக்கும் மக்கள் இது தொடர்பில் வாய்க்கால் புனரமைப்பை மேற்கொண்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை முன் வைத்துள்ளனர். (18)

# சோஆ நிறுவனத்தால் வாழ்வாதார உதவிகள்



(முள்ளியவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவின் முகமாலை கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 35 பயனாளிகளுக்கு முதற்கட்டமாக வாழ்வாதார உதவிகள் நேற்று முன்தினம் சோஆ நிறுவனத்தினால் வழங்கப்பட்டன.

இதில் 3 பயனாளிகளுக்கு பால்மாடும், 1 பயனாளிக்கு ஆடும், சிறுவியாபாரம் செய்ய ஒரு பயனாளிக்கு துவிச்சக்கர வண்டியும்,3 பயனாளிக்கு தையல் இயந்திரமும். 7 பயனாளிகளுக்கு நீர் இறைக்கும், இயந்திரமும் அதற்கான உபகரணகளும் வழங்கப்பட்டன.

கடந்த வருடத்தில் சோஆ நிறுவனம் 85 தற்காலிக வீடுகளையும்.35 நிரந்தர மலசலகூடமும். 5கிலோ மீற்றர் வரையான உள்ளக வீதிகளையும் புனரமைத்ததுடன்.15 வரையான தனிநபர் கிணறுகளையும் திருத்தியுள்ளது.

மற்றும் 40 பயனாளிகளுக்கு காசுக்கான வேலையினையும் வழங்கியுள்ளது. (37)

# இன்னிசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்தப்படும் ஆன்மீக நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இதில் ஆசிரியை திருமதி வானதி மகிந்தனின் இன்னிசை நிகழ்வு இடம்பெறவுள்ளது.






# மாணவர்களிடையே நடாத்தப்பட்ட இந்து சமய போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்வத்தை முன்னிட்டு அறநெறி பாடசாலை மணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

மாணவர்களின் விபரங்கள் வருமாறு

**ஆத்திசூடி**

இ.சானுஜா, இ.சுபீட்ஷா, ப.டினோஜா

**பஞ்சபுராணம்**

இ.திலக்சனா, ஜீ.யதுனன், பா.சினேகா, பா.ஜானுயன்

**தோரணம (மத்திய பிரிவு)**

த.வம்சிகன், இ.சானுஜா, சு.மானுஜா

**மேற்பிரிவு**

பா.ஜானுயன், ச.நிதர்சனா, ப.ராஜசாகினி

**கோலம் (கீழ்ப்பிரிவு)**

கே.நிதர்சனா, சு.கவிநயா, ச.சாருஜி

**மத்தியபிரிவு**

வி.வைஷ்ணவன், சு.மானுஜா, இ.சானுஜா

**மேற்பிரிவு**

பா.சினோகா, ப.ராஜசாகினி, பெ.நிரஞ்சனா, ஜீ.யதுனன்

**திருக்குறள் (மத்திய பிரிவு)**

சு.மானுஜா, இ.சானுஜா, பா.சஞ்சயன்

**மேற்பிரிவு**

இ.திலக்சனா பா.சினேகா, ப.ராஜசாகினி.

(தொடரும்..) (இ)


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................


கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# பாலியல் குற்றங்களைத் தடுக்க கடும் நடவடிக்கை அவசியம்

## பான் கீ மூன் வலியுறுத்து




உத்தரப்பிரதேச மாநிலம் பதாயூனில் இரு சகோதரிகள் கூட்டுப் பாலியல் பலாத்காரத்துக்கு ஆளாக்கப்பட்டு பலியான சம்பவம் அதிர்ச்சியளிப்பதாகவும் உலகில் இதுபோன்ற பாலியல் குற்றங்களைத் தடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து நியூயோர்க்கில் செய்தியாளர்களிடம் பான் கீ மூன் கடந்த செவ்வாய்க்கிழமை கூறியதாவது,

உலகளவில் நைஜீரியா முதல பாகிஸ்தான் வரை மற்றும் கலிபோர்னியா முதல் இந் தியா வரை கடந்த இரு வாரங்களாக பெண்களுக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. இந்தியாவில் இரு சகோதரிகள் கூட்டுப் பாலியல் வன்முறையால் உயிரிழந்துள்ளது பெரும் அதிர்ச்சியை அளிகிறது. பெண்களை சமத்துவத்துடன் நடாத்த வேண்டிய பொறுப்பு அனைத்து நாடுகளுக்கும் உள்ளது.

அதற்காக அனைவரும் ஒருங்கிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்று பான் கீ மூன் கூறினார். கலிபோர்னியாவில் அண்மையில் 3 பெண்களை ஒரு இளைஞர் கொலை செய்த விவகாரம், பாகிஸ்தானில் காதல் திருமணம் செய்த இளம்பெண் அவரது குடும்பத்தினராலேயே கல்லால் அடித்துக் கொல்லப்பட்டது போன்ற சம்பவங்கள் குறித்தும் பான் கீ மூன் வேதனை தெரிவித்தார்.

# பூமியைவிட பெரிய கோள் விஞ்ஞானிகளால் கண்டுபிடிப்பு



(வொஷிங்டன்)

பூமியை விட இரண்டு மடங்கு பெரிதான கோளை, அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். “கெப்ளர் 10 என, பெயரிடப்பட்டுள்ள இந்தக்கோள், பூமியின் எடையை போல, 17 மடங்கும், பரப்பளவில் இரண்டு மடங்கும் பெரிதாக இருப்பதால், “காட்ஜிலா கோள்” என்று விஞ்ஞானிகளால் அழைக்கப்படுகிறது.

இந்த கோள், 45 நாட்களில் சூரியனைச்சுற்றி வருகிறது. உறுதியான பாறைகளால் நிறைந்துள்ள இந்தக் கோளில், உயிர் வாழ்வதற்கான சூழல் உள்ளதா என்ற ஆய்வில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான, நாசாவின், “கெப்ளர் ஸ்பேஸ்கிராப்ட்” இந்தக் கோளை முதலில் கண்டுபிடித்தது. “இதுவரை இத்தகைய பெரிய கோள் கண்டுபிடிக்கப்படவில்லை” என, அமெரிக்காவின் ஹார்வர்டு ஸ்மித்சோனியன் வான் இயற்பியல் மைய விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.


# தே.மு.தி.க. வினால் தீர்மானம் நிறைவேற்றம்




இந்திய அரசியல் கட்சியான தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தினால் இலங்கை தமிழர்களுக்கு ஆதரவான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது சென்னையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடிகர் விஜயகாந்த் தலைமையில் இடம்பெற்ற கட்சியின் உயர் நிலைக் கூட்டத்தின் போது இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை தமிழர்களின் முழுமையான உரிமைகள் மற்றும் சம அந்தஸ்த்துடன் வாழ்வதற்கான ஏதுநிலைகளை இந்தியா உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தி இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் தமிழக மீனவர்கள் அச்சமின்றி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு, வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

# ஒபாமாவின் அழைப்பை ஏற்றுக்கொண்டார் மோடி






(புதுடில்லி)

வெளியுறவுக்கொள்கையில் முன்னேற்றம் காண அமெரிக்கா வரும்படி அதிபர் ஒபாமா, இந்திய பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுத்துள்ளார். ஒபாமாவின் அழைப்பை மோடி ஏற்றுக் கொண்டார். இதன்படி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி நியூயோர்க் நகரில் ஐ.நா. சபையில் மோடி உரை நிகழ்த்த உள்ளார். அச்சமயத்தில் இரு நாட்டு தலைவர்களின் சந்திப்பு நிகழக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 2002-ஆம் ஆண்டு குஜராத் மாநிலம் கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தை காரணம் காட்டி மோடி அமெரிக்கா வருவதற்கான வீசாவை அந்நாடு இரத்து செய்திருந்தது.

இந்நிலையில் நடந்து முடிந்த தேர்தலில் மோடி அமோக வெற்றி பெற்று பிரதமராக பதவியேற்றுக்கொண்டார். பதவியேற்பு விழாவின் போது சார்க் அமைப்பு நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்து உலக நாடுகளின் தலைவர்கள் கவனத்தை தன் பக்கம் ஈர்த்தார். இதனையடுத்து அமெரிக்காவும் தன்னுடைய நிலையிலிருந்து இறங்கி வந்து மோடி தங்கள் நாட்டிற்கு வரும்படி அழைப்பு விடுத்துள்ளது. அமெரிக்க அதிபர் ஒபாமா புதிய பிரதமர் மோடியுடன் இணைந்து பணியாற்ற தயாராக இருப்பதாக உறுதி அளித்திருப்பது வெளியுறவுக் கொள்கையில் புதிய மாற்றத்தை உருவாக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.



லெபனான் சென்றிருந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன்கெர்ரி (இடது), அந்நாட்டு பிரதமர் தமம் சலீமை, பெய்ரூட் அரசு மாளிகையில் சந்தித்து பேசியபோது...

உலகச் செய்திகள்

# பெண்ணின் தோலினால் புத்தகத்தின் முகப்பு அட்டை

அமெரிக்காவின் ஹார்வார்ட் நூலகத்தில் உள்ள ஒரு புத்தகத்தின் முகப்பு அட்டை செய்வதற்கு பெண்ணின் தோல் பயன்படுத்தப்பட்டுள்ள திடுக்கிடும் தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

அங்குள்ள 3 புத்தகங்களின் மேல் அட்டை தோலினால் ஆனது என்று சந்தேகித்த அதிகாரிகள் அவற்றை பரிசோதனைக்கு அனுப்பியதில், அவற்றில் இரண்டு புத்தகங்கள் ஆட்டுத் தோலினாலும், ஒரு புத்தகம் மனிதத் தோல் குறிப்பாக பெண்ணின் தோலினாலும் ‘பைண்டிங்’ செய்யப்பட்டுள்ளது என்பது உறுதியாகத் தெரிய வந்துள்ளது.

மனித ஆன்மாவை வசப்படுத்துவது தொடர்பான ஆராய்ச்சி கட்டுரைகளை ஒரு பிரெஞ்சு நாவலாசிரியர் தொகுத்து புத்தகமாக்கியுள்ளார். அந்தப்புத்தகத்தின் அட்டைக்கு மேலுறையாக மாரடைப்பால் மரணம் அடைந்த அடையாளம் தெரியாத ஒரு மனநோயாளியான பெண்ணின் தோல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

# விமானம் எரிந்து விழுந்ததை நான் கண்ணால் பார்த்தேன்

## - பிரிட்டன் பெண்ணின் பரபரப்புத் தகவல்

(சிட்னி)

மாயமான மலேசிய விமானம், இந்திய பெருங்கடல் பகுதியில், தீப்பிடித்து விழுந்ததை கண்ணால் பார்த்ததாக, பிரிட்டனைச்சேர்ந்த பெண் ஒருவர் கூறியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அது போல், இந்திய பெருங்கடல் பகுதியில், அந்த விமானம் விழுந்திருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில், கடலுக்கடியில் உள்ள கண்காணிப்பு கருவியில் சத்தம் பதிவாகி இருப்பதாக, அவுஸ்ரேலிய ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீனாவின் பீஜிங் நகருக்கு, இந்தியர்கள் உட்பட, 250 பயணிகளுக்கும் மேற்பட்டோருடன் பயணித்த, மலேசிய விமானம், மார்ச் 8 இரவில், திடீரென மாயமாகி விட்டது. அந்த விமானம் என்னவானது என இன்னும் தெரியாத நிலையில், பல சந்தேக தகவல்கள் வந்த வண்ணமாக உள்ளன. மாயமான விமானத்தைக்கண்டு பிடிக்க பல, சர்வதேச அமைப்புகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. இந்நிலையில், அவுஸ்ரேலியாவிலிருந்து, 4,500 கிலோ மீற்றர் தொலைவில், இந்திய பெருங்கடலின் தென் பகுதியில், விமானம் ஒன்று கடலில் வீழ்ந்தது போன்ற சத்தம், கடலுக்கடியில் நிறுத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கருவி ஒன்றில் பதிவாகி இருப்பதாக, அவுஸ்ரேலியா தெரிவித்துள்ளது.



# உக்ரைனில் கலவரம் இந்தியர்கள் வெளியேற்றம்



உள்நாட்டு கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைன் நாட்டின் லுகான்ஸ்க் நகரிலிருந்து 1000 இந்தியர்கள் உக்ரைன் தலைநகர் கியிவ்க்கு அனுப்பப்பட்டுள்ளனர். அங்கிருந்து அவர்கள் இந்தியா திரும்புகின்றனர். இவர்களில் பெரும் பாலானவர்கள் மாணவர்கள். இதில் 300 தமிழர்களும் அடங்குவர். உக்ரைனில் உள்நாட்டு கலவரம் நடந்து வருகிறது. உக்ரைனின் கிழக்கு பகுதியில் உள்ள லுகான்ஸ்க் மற்றும் டோனட்ஸ்க் பகுதிகளில் கலவரம் வெடித்தது.

அதையடுத்து அப்பகுதிகளில் உள்ள மருத்துவப் பல்கலைக்கழகங்களில் படித்து வரும் இந்திய மாணவர்கள் உட்பட 1000 இந்தியர்கள் கியிவ்க்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 350 பேர் கேரளம், 300 பேர் தமிழ்நாடு, 150 பேர் ஆந்திரா, 60 பேர பஞ்சாப், ஜம்மு-காஷ்மீர், மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த தலா 25 பேர் அடங்குவர். அனைத்து இந்தியர்களும் நாடு திரும்ப தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

# பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்க பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும்

## மாகாணசபை உறுப்பினர் தவநாதன் கோரிக்கை



பொதுச்சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகளில் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் வன்னேரிக்குளத்தில் முன்பள்ளிக் கட்டடத்திற்கான அடிக்கல்லினை நாட்டிவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நீண்ட கால யுத்த அழிவுகளுக்குப்பின் இன்று மீளவும் எமது சமூகக் கட்டமைப்புக்கள் வளப்படுத்தப்பட்டு வருகின்றன. பிரதேசங்களின் உட்கட்டுமானங்களும் மக்களின் வாழ்வியலோடு தொடர்புடைய ஏனைய செயற்பாடுகளும் துரிதகதியில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அவற்றின் மேம்பாட்டில் மக்கள் இன்று அதிகமாக அக்கறை செலுத்துவதில்லை. கடந்த காலங்களைப்போன்று பொதுச் செயற்பாடுகளில் மக்கள் ஆர்வம் காட்டும் தன்மை படிப படியாக குறைவடைந்து வருகின்றது எனக் குறிப்பிட்ட அவர், இன்று மக்கள் தமது பிரதேசங்களை சுத்தப்படுத்துதல் தொடக்கம் அனைத்து செயற்பாடுகளுக்கு யாரோ ஒருவரின் உதவியை எதிர்பார்க்கின்றனரே தவிர தாமாக முன்வந்து அல்லது தாமாக உணர்ந்து அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை. இதனால் இன்று உருவாக்கப்பட்டுவரும் பொது கட்டடங்கள் மற்றும் சேவை நிலையங்களை பேணிப் பாதுகாக்கின்ற தன்மையும் குன்றிவிட்டது. அத்தோடு அவ்வாறான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றபோது மக்களின் பங்களிப்பும் மிகக்குறைவாகவே காணப்படுகின்றது எனவே இந்த நிலை தொடருமானால் எதிர்காலத்தில் எமது மக்களின் வாழ்வியலை தீர்மானிக்கின்ற சக்திகூட அவர்களிடம் இல்லாமல் போய்விடும். ஆகவே பொதுச் செயற்பாடுகளில் ஆர்வமும் பொதுச் சொத்துக்களை பாதுகாக்கின்ற பொறுப்புணர்வும் எம்மக்களிடையே மீண்டும் உயிர்ப்பெறவேண்டும் என வை.தவநாதன் மேலும தெரிவித்தார்.

### ஆரம்ப...

நிலையக்கட்டடத்தினை திறந்துவைத்தனர்.

தொல்புரத்தில் வசித்துவரும் ராஜபட்சம் சிறிரங்க பட்சம் ஆகியோரின் சொந்தப் பணத்தின் மூலமாக நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம் யாழ். சுகாதார சேவைகள் திணைக்களத்திடம் நேற்று கைளிக்கப்பட்டது.இக் கட்டடம் 10 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, வடக்கின் மகிந்த சிந்தனை திட்டத்தின் ஊடாக சுகாதாரத்துறை பல்வேறு அபிவிருத்திட்டங்களை கண்டு வருகின்றது 2009 ஆம் ஆண்டு வடக்கில் அழிவுகளை கண்ட 99 சுகாதார வைத்தியசாலைகள் தற்போது மீள் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டிருப்பதாக ஆளுநர் தெரிவித்தார்.

இதனைவிட கிராமமட்டத்திலான முன்கூட்டிய தடுப்பு சேவைகள் 125 நிலையங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் வடக்கில் 550 வைத்தியர்கள் வடக்கில் உள்ளபிரதேச வைத்திய சாலைக்கு நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தற்போது துரிதமான சேவையாற்றி வருகின்றனர் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமாகாணசுகாதார அமைச்சின் செயலாளர் ரவீந்திரன் மற்றும் வைத்திய அதிகாரிகள்,பொதுமக்களும் கலந்துகொண்டனர். (25)

### படையில் இணைந்த...

விடுமுறையில் வீட்டிற்கு வந்த இவர் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் வீட்டிற்கு வெளியில் லைட் வெளிச்சம் தெரிய சகோதரியை யார் என பார்க்கச் சொல்லிவிட்டு, தான் கேற்றின் வெளியே பார்க்கச் சென்றுள்ளார்.

அதன்போது, இனந்தெரியாத நபர்கள் கழுத்தில் வாளால் வெட்டியுள்ளனர். வெட்டிற்கு இலக்காகிய இளைஞர் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாள் வெட்டிற்கு இலக்காகிய இளைஞர் சுயநினைவற்ற நிலையில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (25)

### சுவீகரிக்கப்பட்ட...

ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் இந்த முகாம் 1995 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

இந்த முகாமில் 9 குடும்பங்களுக்குரிய காணிகள் உள்வாங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குரிய நடட ஈட்டுத் தொகையை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது அரச சேவைகளுக்காக பொதுமக்களின் காணியை சுவீகரிக்கும் சட்டம் 1950 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தின் பிரகாரமே வடக்கில் இராணுவ முகாம்களுக்காக காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன.

இவ்வாறான காணி சுவீகரிப்பு இல்லையென்றால் நாட்டில் இன்றைய அபிவேகப் பாதைகள் இருக்காது. அபிவிருத்தி பணிகள் நடைபெறாது. நுணாவிலிலுள்ள இராணுவ முகாமை இன்னும் 2 மாதங்களில் மூடநாம் தீர்மானித்துள்ளோம். அங்கிருந்த இராணுவத்தினருக்காக ஏனைய முகாம்களில் கட்டடங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கட்டடப்பணிகள் முடிந்த பின்னர் இம் முகாம் மூடப்படும். திக்கத்திலுள்ள இராணுவ முகாம் புலிகளிடமிருந்து இராணுவம் கைப்பற்றியதாகும். அதனையும் இராணுவமும் தம் வசம் தொடர்ந்தும் வைத்திருக்கும்.

அப்பிரதேசத்தில் காணி உரிமை கோருவோருக்கு அரசாங்கம் நட்டஈடு வழங்கும் என்றும் பிரிகேடியர் மேலும் சுட்டிக் காட்டினார்.

### முல்லையில்...

தடுப்பதற்காக அடையாளம் தெரியாதவர்கள் ஆர்ப்பாட்டத்திற்கு அழைத்துச் செல்வதற்காக பேருந்துகள் வரும் என்று அரச ஆதரவாளர்கள் சிலர் வீடு வீடாகச் சென்று அறிவித்திருந்ததாகவும், அவ்வாறு காத்திருந்தவர்களை சில பேருந்துகள் ஏற்றி வந்து தமது ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக தாங்கள் நின்றிருந்த இடத்திற்கு சிறிது தூரத்தில் ஒன்று கூடியிருந்ததாகவும் மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார்.

பொலிஸாரின் அனுமதி பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் முடியும் வரையில் அந்தப் பகுதிக்குள் எதிர்த்தரப்பினரைச் செல்லவிடாமல் பொலிஸார் தடுத்திருந்தனர் என்று பி.பி.சி. தெரிவித்தது.

ஆயினும் இரு தரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டிருந்தது அசம்பாவிதங்கள் எதுவும் நிகழவில்லை.

மற்றொரு ஆர்ப்பாட்டம் கடத்தப்பட்டவர்கள், காணாமல் போயுள்ளவர்கள், இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் போயுள்ளவர்களைக் கண்டுபிடித்து விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கை விடுத்து கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இதற்கு எதிராக ஒன்று கூடியவர்கள் விடுதலைப் புலிகளினால் பிடித்துச் செல்லப்பட்டதன் பின்னர் காணாமல் போயுள்ள தமது பிள்ளைகளை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரியதுடன், விடுதலைப்புலிகளினால் தமது பிள்ளைகள் பிடித்துச் செல்லப்பட்டதை நினைவூட்டி கண்டனம் தெரிவித்திருந்தனர்.

### படையில் இணைந்தவர்களுக்கு...

படுகின்றது. இந்நிகழ்வு நேற்றுக்காலை 10.30 மணியளவில் பலாலி கூட்டுப்படைத்தளத்தில் இடம்பெற்றது.

இதில் சிவில் பாதுகாப்பு திணைக்கள அத்தியட்சகர் றியல் அட்மிரல் ஆனந்த பீரிஸ் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி உதய பெரேரா, வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர், பிரதேச செயலர்கள், படை அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது அட்மிரல் ஆனந்த பீரிஸ் மற்றும் யாழ். கட்டளைத் தளபதி ஆகியோர் புதிதாக தொழில் வாய்ப்பைப் பெறுவோருக்கு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தனர்.

தொடர்ந்து கிளிநொச்சி சிவில் பாதுகாப்பு படையினரின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (இ)

### மீள்குடியமர்வுக்கு...

மேலும் யாழ்.மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளார்களா என அமெரிக்க தூதரக அரசியல் அலுவலர் தேமஸ் எல் ரேட்கோ யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகத்திடம் விபரம் அறிந்து கொண்டார்.

யாழிற்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க தூதரகத்தின் அரசியல் அலுவலர் மற்றும் நேபாளம், இந்தியா, இலங்கைக்கான பிராந்திய அகதிகளுக்கான இணைப்பாளர் ஆகியோர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

அச்சந்திப்பின் போது,யாழ். மாவட்டத்தில் எத்தனை நலன்புரி நிலையங்கள் இருக்கின்றன. நலன்புரி நிலையங்களில் இருக்கும் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளார்களா என அமெரிக்க தூதரக அரசியல் அலுவலர் தேமஸ் எல் ரேட்கோ எழுப்பிய கேள்விக்கு நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களை மீள்குடியேற்றம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினால் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்துள்ளனர். அதற்கு அரச அதிபர் பதிலளிக்கையில், மீள்குடியேற்றம் மற்றும் வாழ்வாதாரங்கள், விவசாயம், மீன்பிடி போன்ற விடயங்களில் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் பல்வேறு உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில், மீள்குடியேற்றம் செய்யப்படும் போது, மீள்குடியேற்றம் செய்யப்படுபவர்களுக்கான உணவுப் பொதிகள் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினரால் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

அதேவேளை, தற்காலிக கொட்டகைகள் அமைத்தல் மற்றும் செல்டர் வசதிகளையும் செய்து தருகின்றார்கள்.

அதேவேளை, மீள்குடியேற்றம் முன்னுரிமை அடிப்படையில் செய்யப்படுகின்றபோதிலும் நிரந்தர வீடுகள் தேவையாக இருக்கின்றதாக சுட்டிக் காட்டியுள்ளார். (25)

### வடக்கின்...

களது தொழிலில் பாதிப்புக்களையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது.

எனவே இன்று அப்பகுதி கடற்றொழிலாளர்கள் இரண்டு விதமான பாரிய கடல் ஆக்கிரமிப்புகளை எதிர்கொள்கின்றார்கள். ஒன்று இந்திய இழுவைப் படகுகளின் ஆக்கிரமிப்பு மற்றையது தென்னிலங்கையிலிருந்து செல்லும் கடற்றொழிலாளர்களின் ஆக்கிரமிப்பு எனவும் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் நடைபெற்ற தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழான ஒழுங்குவிதிகள் சம்பந்தமான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார்.

முக்கியமான விடயமொன்றை நான் இங்கு முன்வைக்க விரும்புகின்றேன். முல்லைத்தீவு தொடக்கம் மன்னார் வரையுள்ள கடற்பிரதேசங்களில் சிலிண்டர்களைப் பயன்படுத்தி அட்டை, இறால் பிடித்தலிலும் மற்றும் சங்கு குளித்தலிலும் ஈடுபடுவோரினது ஆக்கிரமிப்பானது அங்குள்ள உள்ளூர் கடற்றொழிலாளர்களுக்கு மிகவும் அசௌகரியங்களையும் அவர்களது தொழிலில் பாதிப்புக்களையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது.

குறிப்பாக, யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் அட்டை பிடித்தல் மற்றும் சங்கு குளித்தலானது தடை செய்யப்பட்டிருப்பதாகவும் முல்லைத்தீவு, மன்னார் போன்ற ஏனைய மாவட்டங்களில் இவை அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் நான் கேள்விப்பட்டேன். என்றாலும், வெளி மாவட்டங்களிலிருந்து வருகின்ற தொழிலாளர்கள் யாழ். குடாநாட்டுக்குள்ளும் வந்து தங்களது ஆக்கிரமிப்பைச் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே, அமைச்சர் இதை முற்றுமுழுதாக தடைசெய்ய வேண்டும். அவர்கள் பயன்படுத்தும் வலைகள், சிலிண்டர்கள் என்பனவும் அட்டை பிடித்தல் மற்றும் சங்கு குளித்தல் போன்ற விடயங்களும் எங்கள் மீனவர்களது தொழில்களில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. மேலும், அவர்கள் எங்களது கடற்றொழிலாளர்களின் நிலங்களையும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

வெளிமாவட்டங்களிலிருந்து வந்தவர்கள் அங்கே நிரந்தர குடியிருப்பாளர்களாக மாறுவதற்கும் இப்போது திட்டமிடுகின்றார்கள். அவர்களுக்கான நிலங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள்கூட எடுக்கப்படுகின்றன. ஆகவே, இந்த விடயத்தில் அமைச்சர் தலையிட்டு தீர்க்கமான முடிவினை எடுக்க வேண்டு மென்று நான் வலியுறுத்துகின்றேன். யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் 43 பல நாள் மீன்பிடிப் படகுகள் இருக்கின்றன. ஆனால். துரதிருஷ்டவசமாக இந்தப் படகுகளைப் பயன்படுத்தும் தொழிலாளர்களுக்கு அவற்றை நங்கூரமிடும் வகையில் நீர்கொழும்பு, திருகோண மலை போன்ற பகுதிகளிலுள்ளவாறான ஒரு துறைமுகம் அங்கில்லை. ஊர்காவற்றுறையில் இருக்கின்ற ஒரு சிறிய துறைமுகத்தைத்தான் அவர்கள் பயன்படுத்துகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரபல்யமான மயிலிட்டித் துறைமுகம் இருக்கின்றது. அது இப்போது இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருக்கின்றது. அதை மீட்டு அந்த தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அடுத்து, இன்னொரு முக்கியமான விடயம்தான் கடற்றொழிலாளர் வீட்டுத்திட்டம். யாழ். மாவட்டத்தில் இருக்கின்ற கடற்றொழிலாளர் குடியிருப்புக்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. இவர்கள் கடற்கரைக்கு அண்மித்த பகுதிகளிலே சிறிய வீடுகளை அமைத்து, பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருகின்றார்கள். நீங்கள் 2-3 வருடங்களுக்கு முன்பு மீனவர்களுக்கென தனியான வீட்டுத் திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதாக பகிரங்கமாக அறிவித்திருந்தீர்கள். ஆனால், இதுவரைக்கும் அது நடைமுறைக்கு வரவில்லை என்பதை நான் இச்சபையிலே ஞாபகப்படுத்த விரும்புகின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

# போக்குவரத்துச் சாலை அபிவிருத்தி; முல்லைத்தீவில் களநிலை ஆய்வு

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முல்லைத்தீவு சாலையின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

முல்லைத்தீவு சாலைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அங்குள்ள தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது குடிநீரை பெற்றுக் கொள்வதில் தாம் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் தொடர்பாக உத்தியோகத்தர்கள் அமைச்சரிடம் எடுத்து விளக்கியதுடன், இதற்கான தீர்வுக்கு உரிய நடவடிக்கையினை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் அதற்குரிய திட்ட அறிக்கையினை தமக்கு சமர்ப்பிக்குமாறும் அதன்பிரகாரம் அது குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இதனிடையே சாரதிகள், இயந்திர திருத்துனர்களின் பற்றாக்குறையால் தாம் நாளாந்தம் பல்வேறுபட்ட நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டப்பட அதேவேளை, சேவைகளில் ஈடுபடுவதற்கு போதுமான பேருந்துகள் இல்லாது பற்றாக்குறை நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், நீண்டகால பணிபுரியும் சிலருக்கு நிரந்தர நியமனங்கள் குறித்தும் அமைச்சரிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி உரிய தீர்வினைப் பெறறுத் தருவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

இதன்போது அமைச்சரின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஜெயராஜும் (கிருபன்) கலந்து கொண்டார்.

# மோதிக் கொண்டன கனரக வாகனங்கள்



ஏ-9 வீதி புளியங்குளம் பரசன்குளம் பகுதியில் வீதியோரமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்துடன் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி, சிமெந்து ஏற்றிவந்த பாரஊர்தி மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு வாகனங்களும் சேதமடைந்தன. சாரதி சிறுகாயங்களுடன் தப்பிக் கொண்டார். இந்த விபத்து நேற்று காலை 9.00 மணியளவில் இடம்பெற்றது

## ஐ.நா. பொதுச் சபைத் தலைவர் யார்? உகண்டா பக்கம் கொழும்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைமைப் பதவிக்கான உகண்டா வேட்பாளருக்கு ஆதரவளிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.


ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைமைப் பதவியானது வருடாந்தம் சுழற்சி முறையில் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பொதுச் சபையின் தலைமைப் பதவிக்காக உகண்டா இம்முறை வேட்பாளர் ஒருவரை நிறுத்த உள்ளது.

உகண்டாவின் சாம் குடிஸா பொதுச் சபையின் தலைமைப் பதவிக்காக போட்டியிட உள்ளார்.

உகண்டாவின் வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்கு விஜயம் செய்திருந்த போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# தீவகத்தில் துரித அபிவிருத்தி; தயாராகிறது செயற்றிட்டம்



(வேலணை)

யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், தீவக ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் உதயனின் தலைமையில் வேலணை மற்றும் ஊர்காவற்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடலில் அரச உத்தியோகத்தர்கள் விசேட மக்கள் பிரதிநிதிகள் பிரதேசசபைத் தலைவர் ஜெயகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வேலைத் திட்டங்கள் நாடாளுமன்ற உறுப்பினருக்கென அரசினால் ஒதுக்கப்பட்டுள்ள விசேட நிதியினூக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது

# செயலாளர் வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை

வடமகாகாணத்தில் வெற்றிடமுள்ள இரு உள்ளூராட்சி சபைகளின் செயலாளர் பதவிகளுக்கு நியமனம் வழங்க வடமகாண ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுன்னாகம் பிரதேசசபை, பளை பிரதேசபை ஆகிய இரு சபைகளுக்கே விரைவில் செயலாளர்கள் நியமனம் வழங்கப்படவுள்ளது. கடந்த மாதம் 4 சபைகளுக்கு வடமகாண ஆளுநர் புதிய செயலாளர்களை ஆளுநர் நியமனம் வழங்கியிருந்தார் என ஆளுநர் அலுவலகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கச்சாயில் கத்திக் குத்து; கணவன் - மனைவி காயம்

கச்சாய் தெற்கில் நேற்று இடம்பெற்ற திருட்டு முயற்சி ஒன்றின் போது முதியவர்களான கணவன் - மனைவி ஆகிய இருவரும் கத்திக்குத்துக்கு இலக்காகினர்.

நேற்று இரவு 8.00 மணியளவில் கச்சாய் தெற்குப் பகுதியில் கத்திகள், பொல்லுகள் சகிதம் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வீடொன்றுக்குள் புகுந்து திருட முற்பட்டபோது வீட்டில் உள்ளவர்கள் கூக்குரலிடவே வீட்டில் இருந்த கணவன் - மனைவி ஆகிய இருவரையும் கத்தியால் குத்திவிட்டு வீட்டு ஜன்னல் கண்ணாடிகளையும் அடித்து நொறுக்கிவிட்டுச் தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் அம்பலவாணர் வேலுப்பிள்ளை (வயது - 71) அவரது மனைவியான வேலுப்பிள்ளை காசிப்பிள்ளை (வயது-63) ஆகிய இருவரும் கத்திக்குத்துக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பல்கலைக்கழக மாணவியின் சங்கிலி அறுத்த திருடர்கள்

## மோட்டார் சைக்கிளைக் கைவிட்டு தப்பியோட்டம்

(கொக்குவில்)

யாழ்.கொக்குவில் பிரம்படி வீதியில் நேற்று முன்தினம் நண்பகல் தனியே நடந்து சென்று கொண்டிருந்த யாழ். பல்கலைக்கழக மாணவியின் கழுத்திலிருந்த சங்கிலியினை அறுத்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் நிலைதடுமாறி வீழ்ந்ததில் மோட்டார் சைக்கிளினை அவ்விடத்தில் கைவிட்டு தப்பியோடியுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

சங்கிலியின் ஒரு பகுதி மாணவியின் கையிலேயே இருந்ததாகவும் குறித்த மோட்டார் சைக்கிளினையும், அதன் அருகிலிருந்து மெமறிக் கார்ட் மற்றும் தொலைபேசி கவர் ஆகியவற்றினை மீட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றித் தெரியவருவதாவது,

குறித்த பல்கலைக்கழக மாணவி, பல்கலைக்கழகத்தில் விரிவுரைகள் முடிவுற்று தான் தங்கியிருந்த பிரம்படியிலுள்ள வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளின் பின்னால் வந்த இருவர் சங்கிலியினை அறுத்துக் கொண்டு ஓடியுள்ளனர்.

இதன்போது மாணவி கூக்குரலிடவே அங்கு பொதுமக்கள் வருவதினை அவதானித்த சங்கிலித் திருடர்கள் நிலைதடுமாறி வீழ்ந்ததால் மோட்டார் சைக்கிளினை அவ்விடத்திலேயே விட்டுவிட்டுத் தப்பி ஓடியுள்ளனர்.

இது தொடர்பாக குறித்த மாணவி யாழ். பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டினையடுத்து மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட பொருட்களை மீட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முன்னாள் புலிகளுக்கு சிங்கப்பூரில் தொழில் வாய்ப்பு

(கொழும்பு)

முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகளுக்கு சிங்கப்பூரில் தொழில் வாய்ப்பு வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அரசாங்கப் படையினரிடம் சரணடைந்த முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகளுக்கு இவ்வாறு தொழில் வாய்ப்பு வழங்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 40 முன்னாள் போராளிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்க விரும்புவதாக சிங்கப்பூர் அறிவித்துள்ளது.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஜகத் விஜயதிலக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

# மதுவரி அலுவலகங்களில் ஆளணி நிரப்ப நேர்முகப்பரீட்சை

வடமாகாணத்தில் உள்ள மது வரித்திணைக்கள அலுவலகங்களில் உள்ள ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சைகள் தற்சமயம் நடைபெற்று வருவதாக தெரிவித்த யாழ். மதுவரித் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி க.செந்தூர்ச்செல்வன் தெரிவித்தார்.

வடக்கில் 25 மதுவரிக் காவலர்களும், 10 மதுவரிப் பரிசோதகர்களும் நியமிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சட்டவிரோத மதுபாவனை குறித்து கருத்து வெளியிட்ட அவர் யாழ். பிரிவில் சட்டவிரோதக் கசிப்பு மற்றும் கள் விற்பனை குறைவடைந்துள்ளதாகவும், போதைப்பொருள் பாவனை இரகசியமான முறையில் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

இவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தாம் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மதுவரித் திணைக்களத்தின் விசேட தடுப்புப்பிரிவினர் இவ்வாறான நடவடிக்கையின் போது சுமார் ஐந்து கிலோ வரை போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக்வும் அவர் தெரிவித்தார். (பா)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.